விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 03 செவ்வாய்க்கிழமை (19.07.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 212

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# மக்களின் உரிமைகளை எவரும் பறித்துவிட முடியாது



## ஜனாதிபதி வேலணையில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உங்கள் உரிமை உங்களிடமே இருக்க வேண்டும். அதை யாரும் பறிக்க முடியாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று மாலை 4 மணியளவில் வேலணையில் இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (20ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டில் அனுமதியின்றி 5 இலட்சம் ஆயுதங்கள்!

(கொழும்பு)

நாட்டில் அனுமதிப்பத்திரமற்ற சுமார் 5 இலட்சம் ஆயுதங்கள் காணப்படுவதாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

மேற்படி ஆயுதங்களை ஒப்படைப்பவர்களுக்கு அரசாங்கம் மன்னிப்பு வழங்கவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு வழங்கப்படும் கால அவகாசம் முடிந்தபின் நாடளாவிய ரீதியில் தேடுதல் மேற்கொள்ளப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த ஆயுதங்களில் பெரும்பாலானவை பாதாள (20ஆம் பக்கம் பார்க்க)

## கோப்பாயில் இருமாடி கட்டிடம் ஜனாதிபதி திறந்து வைப்பார்

(யாழ்ப்பாணம்)

ஊவா மாகாணத்தால் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்திற்கு அமைத்துக் கொடுக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டிடத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று திறந்து வைப்பார்.

இன்று காலை 10.00 மணிக்கு திறப்பு விழா வைபவம் இடம்பெறும். (ந)

## வவு.சிறைக்கைதிகளின் உண்ணாவிரதம் முடிவு

(வவுனியா)

வவுனியா சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ் அரசியல் கைதிகள் நேற்றுத் திங்கட்கிழமை மாலை உண்ணாவிரதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளதாக வவுனியா சிறைச்சாலை தகவல்கள் தெரிவித்தன.

மன்னார் மறை மாவட்ட அதிவண. ஆயர் இராயப்பு ஜோசப் வழங்கிய உறுதிமொழியையடுத்தே இந்த உண்ணாவிரதப் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது.

சிறைச்சாலைகள் ஆணையாளர் மேஜர் ஜெனரல் (20ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியா-அமெரிக்காவுடனான உறவை அரசாங்கம் துண்டித்து விடவேண்டும்!

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கோரிக்கை

(கொழும்பு)

இந்தியாவும், அமெரிக்காவும் இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற விசாரணைகளுக்கு தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்குமானால் அந் நாடுகளுடனான சகல விதமான உறவுகளையும் அரசாங்கம் உடனடியாக துண்டிக்க வேண்டும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத்திற்கு எதிராக அரசாங்கம் பெற்ற வெற்றியை பொறுத்துக்கொள்ள முடியாமல் சர்வதேசம் பகை தீர்க்க முயற்சிக்கின்றது. இதற்கான உதவிகள் உள்ளூரிலிருந்தும் செல்கின்றது. எனவே உள்நாட்டில் ஒளிந்திருக்கும் தேசத் துரோகிகளை இனங்கண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் இவ் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமர சேகர மேலும் தெரிவித்துள்ளதாவது,

உள்நாட்டுப்போரை முடிவுக்குக் கொண்டு வந்த படைத்தரப்பின் தியாகத்துடன் கூடிய மனிதாபிமான நடவடிக்கைகள் சர்வதேச நாடுகளுக்கு போர்க்குற்றச் செயல்களாக தெரிகின்றது.

பான் கீ மூனின் தலைமையிலான நிபுணர்கள் குழு தொடக்கம் லண்டன் சனல் 4 வரை இலங்கைக்கு (20ஆம் பக்கம் பார்க்க)





வேலணையில் ஜனாதிபதி...

## தேர்தல் பிரசாரங்கள் நாளை நள்ளிரவுடன் நிறைவு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் யாவும் நாளை புதன்கிழமை நள்ளிரவுடன் நிறைவு பெறும் என்று தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளர் கையொப்பமிட்டு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஆவரங்காலில் விபத்து இளம் குடும்பஸ்தர் பலி

(அச்சுவேலி)

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் பலியானார்

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11.00 மணியளவில் ஆவரங்கால் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அச்சுவேலி தெற்கைச்சேர்ந்த மகாலிங்கம் தமிழ்மாறன் வயது (26) என்ற ஒரு பிள்ளை (20ஆம் பக்கம் பார்க்க)

# இறைமையுள்ள நாடுகளின் விடயத்தில் சர்வதேச நீதிமன்றம் தலையிட முடியாது

## அதன் தலைமை நீதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இறைமையுள்ள நாடுகளின் தேசிய எல்லைக்கு அப்பால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றமானது எந்தவொரு சூழ்நிலையிலும் மேலாகச் சென்றுவிட முடியாது என சர்வதேச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி சாங் கியூன் சோங் தெரிவித்துள்ளார்.

இலங்கை, இஸ்ரேல், அமெரிக்கா போன்ற ரோம் சாசனத்தில் கைச்சாத்திடாத நாடுகள் தொடர்பான விடயங்களை சர்வதேச நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

சிட்னியில் கடந்தவாரம் இடம்பெற்ற பொதுநலவாய சட்ட (20ஆம் பக்கம் பார்க்க)



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## நல்லூர்க் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம்

சனத்தொகை கணக்கெடுப்புத் தொடர்பில் நல்லூர் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறும்.

இக்கூட்டத்தில் சகல அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மாணிக்கராஜா அறிவித்துள்ளார். (ந)

# அடிப்படை வசதியின்றி சேந்தாங்குளத்தில் மீள்குடியேறிய மக்கள் பெரும் அவலம்

(யாழ்ப்பாணம்)

கீரிமலை சேந்தாங்குளம் பகுதியில் மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்கள் அடிப்படை வசதிகளின்றி அல்லல்படுவதாக ஐக்கிய தேசிய கட்சியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனிடம் முறையிட்டுள்ளனர்.

சேந்தாங்குளம் பகுதிக்கு நேற்று மாலை விஜயம் செய்த பாராளுமன்ற உறுப்பினர் அப்பகுதியில் மீளக் குடியேற றப்பட்ட மக்களை சந்தித்து அவர்களது குறைபாடுகள் குறித்து கேட்டறிந்து கொண்டார். இங்கு கருத்து தெரிவித்த மக்கள், நான்கு மாதங்களுக்கு முன்னர் தாங்கள் மீள்குடியேற்றப்பட்டபோதும் குடி தண்ணீர் வசதியோ மலசலகூட வசதியோ வீட்டு வசதியோ உரிய முறையில் எமக்கு செய்து தரப்படவில்லை.

கடந்த ஒரு வருடகாலமாக பௌசர் பழுதடைந்தமையினால் குடிதண்ணீர் இன்றி நாம் பெரும் கஷ்டங்களை அனுபவித்தோம்.92 குடும்பங்கள் இங்கு வசிக்கின்ற போதிலும் ஆயிரம் லீற்றர் கொள்வனவு கொண்ட இரண்டு தண்ணீர் தாங்கிகளே வழங்கப்பட்டுள்ளன. இவை எமக்கு போதுமானதல்ல.எமக்கு அடிப்படை வசதிகளை செய்து தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து உரிய தரப்பினரின் கவனத்திற்கு கொண்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் உறுதியளித்துள்ளார். (ஏ)

# சங்கிலியன் சிலைக்கு பதிலாக கே.பி. சிலை அமைப்பா?-ரணில்

(கொழும்பு)

வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக போரிட்ட மாயாதுன்ன மன்னனுக்கு மதிப்புகொடுக்கப்படுமானால். தமிழ் மன்னனான சங்கிலியனுக்கும் மதிப்புக்கொடுக்கப் படவேண்டும்.எனினும் யாழ்ப்பாணத்தில் இன்று சங்கிலிய மன்னனின் சிலை அகற்றப்பட்டுள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாதது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடக சந்திப்பை நடத்திய அவர் யாழ்ப்பாணத்தில் சங்கிலிய மன்னனின் சிலையை அகற்றிவிட்டு கே.பி எனப்படும் குமரன் பத்மநாதனின் சிலையை நிறுவ அரசாங்கம் முயற்சிக்கிறதா என்று ரணில் கேள்வி எழுப்பினார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது சரத் பொன்சேகாவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் வடக்கில் அதிஉயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படும் என்று உறுதியளித்தனர். எனினும் யுத்தம் நிறைவடைந்து இன்று 2 வருடங்கள் ஆகியும் ஒரு சிறு அதி உயர் பாதுகாப்பு வலயமாவது அகற்றப்படவில்லை.

எனவே இங்கு உறுதிமொழிகள் யாவும் நிறைவேற்றப்படவில்லை என்று ரணில் விக்கிரமசிங்க குற்றம் சுமத்தினார்.

போரினால் பாதிக்கப்பட்ட இடம்பெயர்ந்த மக்கள். அவர்களின் சொந்த இடங்களில் குடியேற்றப்படவில்லை.வேறு இடங்களிலேயே குடியேற்றப்பட்டுள்ளார்கள். எனினும் அரசாங்கம் சர்வதேசத்துக்கு மீள்குடியமர்த்தலை நியாயப் படுத்திக் கொண்டிருக்கிறது.

வடக்கில் தேர்தல் நியாயமாக நடத்தப்பட வேண்டும்.இதன் மூலமேஅங்கு மக்களின் உண்மையான கருத்தை அறிய முடியும் என்றும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

வடக்கில் தேர்தல் வன்முறைகளின் பின்னணியில் கட்சி ஒன்று செயற்படுகிறது .இது நியாயமான தேர்தலுக்கு அச்சுறுத்தலாக இருக்கிறது.

இந்தக்கட்சியுடன் கொழும்பில் இருந்து சென்ற அமைச்சர்களும் இராணுவத்தின் சில தளபதிகளும் செயற்படுவதாக ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார். (எ-8)


## வலி.வடக்கு பிரதேசசபைத் தேர்தல் 23 யூலை -2011



தமிழ் இனத்தின் விடுதலை சர்வதேச அழுத்தம், சமூக அபிவிருத்திப் பணி இவற்றை முன்னெடுத்துச் செல்ல ஒன்று சேர்ந்து வாக்களிப்பீர்!

**இலங்கைத் தமிழரசுக் கட்சி**
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

11

நடராசா மதியழகராசா (மதி)

(3719)


## தொழிற்பயிற்சி அதிகார சபையின் இலவச பயிற்சிக் கருத்தரங்கு

வெளிநாட்டு வேலைவாய்ப்பினை முதன்மை நோக்கமாகவும்,உள்நாட்டு தொழிலாளர்களை உருவாக்குமுகமாகவும் ,இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை முதன் முதலாக யாழ்ப்பாண மாவட்டத்தில் அரசாங்க சான்றிதழுடன் கூடிய இலவச தொழிற்பயிற்சி ஒன்றை நடத்தவுள்ளது.

ஹோட்டல் முகாமைத்துவம், ஹோட்டல் மேற்பார்வை ,உபசரணையாளர்கள் ஆகிய கற்கை நெறிகளை 12 நாட்கள் இலவசமாக பயிற்றுவித்து சான்றிதழை வழங்கவுள்ளது.

இதில் ஒவ்வொரு கற்கை நெறிக்கும் தலா 50 மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

மேற்படி கற்கை நெறிகளில் இணைய விரும்புவோர் தமது முகவரி,தொலைபேசி இலக்கத்துடன் கூடிய சுயவிபரக் கோவையை மாவட்ட பணிமனை ,இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, 375,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 31ம் திகதிக்கு முன்னர் அனுப்பிக்கு வைக்குமாறு யாழ்ப்பாண இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை மாவட்ட இணைப்பாளர் இரா அகிலன் கேட்டுக்கொள்கின்றார்.(சு)

## பரீட்சைக்கு தயார்படுத்துதல்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பொது நூலகத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட உள்ளூராட்சி வார சிறப்புக் கருத்தரங்கு நாளை புதன்கிழமை காலை 10.00 மணிக்கு கோண்டாவில் மேற்கு வேதபாராயண சனசமூக நிலையத்தில் நடைபெறும்

இதில் மாணவர்களை பரீட்சைக்குத் தயார்படுத்தலும் வழிகாட்டலும் எனும் கருப்பொருளில் கருத்தரங்கு நடைபெறும். (ஏ)


## சிவபார்வதி ஜோதிட நிலையம்

**பண்டித்-மஞ்சுநாத சுவாமி**

தொ.பே. இல: 077 8949044

அன்பானவர்களே!

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள சுவாமி அவர்கள் வம்சாவளியாக காளி அம்மன் அருள் கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, தொழில், வியாபாரம், லட்சுமிகர விடயமான பொருத்தம் போன்ற விடயங்களையும், கணவன்-மனைவி ஒற்றுமையின்மை, கோர்ட் வழக்கு, உடல் நலமின்மை போன்றவற்றிற்கு பரிகாரம், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல், வெளியூர் பயணங்கள், கல்வி உத்தியோகம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், வாஸ்து சாஸ்திரம், எதிரிகள் கண்திருஷ்டி போன்ற எல்லாவித பிரச்சினைகளையும் எதிர்கால பலாபலன்களையும் தெரிவிப்பார்.

**சண்ஜெய உணவகம் (மேல்மாடி)**

414, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(HNB வங்கி அருகில், யாழ். பஸ் நிலையம் முன்பாக)

நேரம்:- காலை 7.00 மணி முதல் மாலை 7.30 மணி வரை

கட்டணம் ரூபா 101/-

(5391)



ஐயப்ப சுவாமி துணை

காரைநகர் வியாவில்பதி ஆதிஷேத்ரம்

திருவருள்மிகு பூரணா புஷ்கலா சமேத ஹரிஹரபுத்ர

**ஐயப்ப சுவாமி தேவஸ்தானம்**

**திவ்விய மஹோற்சவ விஞ்ஞாபனம்**

**2011**

கொடியேற்றம் :- 21.07.2011 வியாழக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு
தேர் :- 29.07.2011 வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு
தீர்த்தம் :- 30.07.2011 சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு
பூங்காவனம் :- 31.07.2011 ஞாயிற்றுக்கிழமை மாலை 7.00 மணிக்கு

தினமும் மகேஸ்வர பூசை இடம்பெறும்.

காரைநகர். ஆலய நிர்வாக சபை

அனுசரணை:-

**சிவகணேசன் ஸ்ரோர்ஸ்**

மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(சி-3810)



## தவறிவிட்டது

முத்துலிங்கம் உதயகுமார் என்பவரது NP JA 2161 எனும் இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் இன்சூரன்ஸ், ரக்ஸ், லைசென்ஸ் ஆகியன திருநெல்வேலிக்கும் கன்னாதிட்டி சந்திக்கும் இடை யில் தவறிவிட்டது. இதனை கண்டெடுத்தவர்கள் உடன் தொடர்பு கொள்க. தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

* தொலைபேசி இல: 077330 2853
077 1171 859
* 80/3 சேர் பொன் இராமநாதன் வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

(5506)



## விற்பனை ஆட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் புடவை நிலையத்துக்கு அனுபவமுள்ள, பழக விரும்பும் பெண் விற்பனையாளர் தேவை. 40-45 வயதிற்குட்பட்ட ஆணொருவரும் தேவை.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புக்கு:- லைடன் புடவை நிலையம், 410, ஆஸ்பத்திரி வீதி, (பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2381

(சி-3806)



## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு விற்பனைப் பிரதிநிதிகள் இருவர் உடனடியாக தேவைப்படுகின்றனர். ஆங்கில அறிவு மற்றும் திறமையாக உரையாடக் கூடிய ஆற்றலுடன் தகுதியானவர்கள் தங்கள் விண்ணப்பங்களை

விளம்பர இல:- சி-3804
மே/பா. வலம்புரி இல.3,2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு உடன் அனுப்பி வைக்கவும்.

(சி-3804)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,இலங்கை

**கலைப்பீடம்**

**கலைப்பீடப் பரீட்சைகள்**

கலைப்பீடத்தின் கலைமாணிப் பட்ட மற்றும் நுண்கலைமாணிப் பட்டப்படிப்பை பயிலும் மாணவர்களிற்கான முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள் யாவும் பின்வரும் திகதி ஒழுங்கில் ஆரம்பமாகின்றன.

| வருடம் | கலைமாணி | நுண்கலைமாணி (இராமநாதன் நுண்கலைக்கழகம்) |
|---|---|---|
| முதலாம் வருடம் | 25.07.2011 | 25.07.2011 |
| இரண்டாம் வருடம் | 08.08.2011 | 27.07.2011 |
| மூன்றாம் வருடம் | 01.08.2011 | 27.07.2011 |
| நான்காம் வருடம் | 25.07.2011 | 25.07.2011 |

முழுமையான நேரசூசியினை கலைப்பீடாதிபதி அலுவலக மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழக விளம்பரப் பலகைகளில் பார்வையிடலாம்.

பதிவாளர்
18.07.2011

(சி-3807)

## இன்று ஒரு தகவல்

# ஆசைக்கும் எல்லை உண்டு

ஓர் ஆள் மிகவும் வேகமாகப் போய்க் கொண்டிருந்தான். அவன் வேகமாக நடந்ததற்குக் காரணம்... அது வெயில் காலம்... காலில் செருப்பு இல்லை... மணல் பாதை... அதுதான் அவன் வேகமாக நடந்ததற்குக் காரணம்.

காலில் செருப்பும் இல்லாமல், கையில் குடையும் இல்லாமல், அந்த ஆள் வெயிலில் நடந்து போய்க் கொண்டிருந்தான்.

அந்தச் சமயத்தில் இன்னொருவன் குதிரை மீது ஏறி அந்த வழியாக வந்து கொண்டிருந்தான். அவன் காலில் செருப்பும் இருந்தது. கையில் குடையும் இருந்தது.

நடந்து போய்க்கொண்டிருந்தவன் அந்தக் குதிரை ஆசாமியைப் பார்த்து, "ஐயா! நீங்களோ குதிரை மீது உட்கார்ந்து கொண்டு போகிறீர்கள். அப்படியிருக்கும் போது உங்களுக்கு அந்தச் செருப்பு எதற்கு? அதை எனக்குக் கொடுத்து உதவலாமே!" என்று கேட்டான்.

குதிரை மீது உட்கார்ந்திருந்தவன் யோசித்தான். 'இவன் சொல்வதும் நியாயம்தானே...' என்று நினைத்த அவன், தன்னுடைய செருப்பைக் கழற்றி அந்த வழிப்போக்கனுக்குக் கொடுத்தான்.

"மிகவும் நல்லது" என்று சொல்லி வழிப்போக்கன் செருப்பை வாங்கி தன் காலில் மாட்டிக்கொண்டான்.

அதன் பின்னர் மீண்டும் வழிப்போக்கன் பேச ஆரம்பித்தான்:

"ஐயா... நீங்கள் குதிரையில் போவதால், போக வேண்டிய இடத்திற்கு விரைவில் போய்ச் சேர்ந்து விடுவீர்கள். அதனால் உங்கள் கையில் அந்தக் குடை எதற்கு? நான் நடந்து போய்க் கொண்டிருப்பவன். நான் இந்த வெயிலில் நீண்டநேரம் நடக்க வேண்டியிருக்கும்! அதனால் அந்தக் குடையையும் எனக்குக் கொடுங்களேன்!" என்று வினவினான்.

குதிரை வீரன் யோசித்தான். 'இதுவும் நியாயம்தான்' என்று அவனுக்குத் தோன்றியது.

உடனே அவன் இரக்கப்பட்டு தன்னிடமிருந்த குடையையும் வழிப்போக்கனிடம் கொடுத்துவிட்டான்.

அதன் பின்னர் குதிரை வீரன் நிம்மதியாகப் புறப்பட்டான்.

இப்போது வழிப்போக்கன் மறுபடியும் கைதட்டி குதிரை வீரனை நிறுத்தினான்.

"என்னப்பா... ஏன் என்னை நிறுத்தினாய்? இன்னும் உனக்கு ஏதாவது வேண்டுமா?" என்று குதிரையில் இருந்தவன் வினவினான்.

இவன் மெதுவாக வாயைத் திறந்து, "அந்தக் குதிரையும் எனக்குக் கொடுங்களேன்!" என்றான்.

அந்தக் குதிரைவீரன் இப்போது ஒரு கணம் யோசித்துப் பார்த்தான்.

உடனே அவன் என்ன செய்தான் தெரியுமா?

தன்னிடம் இருந்த குதிரைச் சவுக்கை எடுத்தான். குதிரைச் சவுக்கால் அந்த ஆளை 'வாங்கு, வாங்கு!' என்று வீசித் தள்ளிவிட்டான்.

அவ்வளவு சவுக்கடியையும் வாங்கிக் கொண்டு அந்த ஆள் சிரித்தான்!

அடி வாங்கிக்கொண்டு யாராவது சிரிப்பார்களா?

குதிரை வீரனுக்கு ஒன்றும் புரியவில்லை!

அவன், "என்னப்பா இது? ஏன் அடி வாங்கிக் கொண்டு இப்படி சிரிக்கிறாய்?" என்று கேட்டான்.

இப்போது அந்த வழிப்போக்கன் கூறினான்:

ஐயா.. நான் இப்படி சிரிப்பதற்குக் காரணம் இருக்கிறது! இப்படி குதிரையைக் கேட்டு நான் உங்களிடம் அடி வாங்கவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். என் உயிர் உள்ளவரையில் மனதில் ஒரு தவிப்பு இருந்து கொண்டே இருக்கும், செருப்பையும் குடையையும் கேட்டவுடனே கொடுத்தாரே... குதிரையையும் கேட்டிருந்தால் கொடுத்திருப்பாரோ! என்ற பேராசையில் ஏங்கிக் கொண்டே இருப்பேன். இப்போது உங்களிடம் அடி வாங்கிய பின்னர் என்னுடைய அந்தச் சந்தேகம் தீர்ந்து போய்விட்டது! இப்போது என்னுடைய ஆசைக்கு எல்லை எது என்பது எனக்குப் புரிந்துவிட்டது! என்று சொல்லிவிட்டு அவன் நடக்க ஆரம்பித்தான்.

இந்தக் கதை 'ஆசைக்கும் எல்லை உண்டு' என்பதை விளக்குகிறது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 60 சதவீத மக்களிடம் தேசிய அடையாள அட்டை இல்லை

## அரச அதிபர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 60 சதவீத மக்களிடம் தேசிய அடையாள அட்டை இல்லை என அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ் வரன் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையில் பெரும்பாலான வாக்காளர்கள் தமது வாக்குகளை பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போர் நடைபெற்ற போதும் இந்த மக்கள் முகாம்களில் வசித்த போதும் அவர்களில் பலரது அடையாள அட்டைகள் காணாமல் போயுள்ளதாகவும் அரச அதிபர் கூறியுள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வாக்களிப்பதற்காக தற்காலிக அடையாள அட்டைகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள போதிலும் மக்கள் தற்காலிக அடையாள அட்டைகளைப் பெறுவதில் அக்கறை காட்டவில்லை எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (ஸ்ரீ-4)

## யாழ்.மாநகரசபையின் மாதாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபையின் இவ்வாண்டுக்கான ஏழாவது மாதாந்தப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாநகர முதல்வரின் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறும்.

கூட்டத்திற்கு மாநகர சபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு செயலாளர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சுதுமலை ஈஞ்சடி ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவத்தை முன்னிட்டு நாவலர் சனசமூக நிலையத்தினரால் நடத்தப்பெற்ற சமய அறிவுப் போட்டி பரீட்சைக்கான பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு இவ்வாலய மண்டபத்தில் இவ்வாலய மண்டபத்தில் நாவலர் சனசமூக நிலையத் தலைவர் சி.பவன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி. பிறேமாநிதி அம்பிகைபாலன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.சிந்மய பாரதி வித்தியாசாலை அதிபர் த.சண்முகசுந்தரமூர்த்தி, அட்டகிரி சைவ வித்தியாசாலை பிரதி அதிபர் தி.சிறிகரன், யா/இணுவில் மத்திய கல்லூரி ஆசிரியர் திருமதி திகழ் ஜோதி பிரபானந்தன், சுதுமலை வடக்கு கிராம சேவையாளர் இ.லோகநாதன், உடுவில் தென்கிழக்கு கிராம சேவையாளர் சி.பாலசுப்பிரமணியம், மல்லாகம் கிராம சேவையாளர்இ.கங்காதரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். அத்துடன் பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம் பெறும். (ஸ்ரீ-2)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 40 |
| உருளைக்கிழங்கு | 85 | 70 |
| பச்சைமிளகாய் | 70 | 80 |
| தக்காளி | 40 | 40 |
| மரவள்ளிக் கிழங்கு | 50 | 40 |
| கோவா | 60 | 60 |
| கரட் | 50 | 60 |
| பூசணி | 25 | 25 |
| புடோல் | 30 | 30 |
| வாழைக்காய் | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 110 | 80 |
| பெரிய வெங்காயம் | 55 | 60 |
| பாகற்காய் | 70 | 90 |
| வெண்டிக்காய் | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | -- | -- |
| பயற்றங்காய் | 80 | 100 |
| லீக்ஸ் | 50 | 50 |
| பீற்றூட் | 40 | 60 |
| கறிமிளகாய் | 70 | 60 |
| முருங்கைக்காய் | 100 | 130 |
| போஞ்சி | -- | 100 |
| கத்தரிதம்புள்ள | 20 | 20 |
| கீரை - 1 பிடி | 10-12 | 15 |
| தேசிக்காய் | 40 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 25-45 | 40 |

## இராசி பலன்

19.07.2011
(ஆடி 03, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
சதுர்த்தி பிற்பகல் 3.26 மணிவரை
சதயம் பிற்பகல் 3.14 மணிவரை
இராகுகாலம் 3.01-4.31 மணிவரை
சுபநேரம் 10.31-12.01 மணிவரை
சங்கடஹர சதுர்த்தி விரதம்,
முதலாம் ஆடிச் செவ்வாய்,
சுவாமி விபுலானந்தர் நினைவு தினம்.

**மேடம்**  தொழில் வளர்ச்சி மேலோங்கும், தொல்லை தந்தவர்கள் விலகுவர், தொகை எதிர்பார்த்தபடியே வந்து சேரும், குடும்ப ஒற்றுமை பலப்படும், உற்சாகமான நாள்.

**இடபம்**  நல்ல காரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், விலகிச் சென்றவர்கள் உங்கள் உதவியை நாடி வரலாம்.

**மிதுனம்**  விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், விரயங்கள் மேலோங்கும், பொறுப்புக்களும் சுமைகளும் அதிகரிக்கும், எதிர்பாராத பயணங்களால் அலைச்சல் கூடும்.

**கடகம்**  வள்ளி மணாளனை வழிபட்டு நலம் காண வேண்டிய நாள், பிரயாணங்களின் போது கூடிய கவனம் தேவை, எதிர்பாராத மனஸ்தாபங்கள் ஏற்படலாம், உடல் நலனில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**சிங்கம்**  சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், விருந்து பசாரமுண்டு, களஸ்திர நன்மையுண்டு, ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

**கன்னி**  சுவாரஸ்யமான நாள், உயரதிகாரிகள் அனுசரணையாக நடந்து கொள்வர், புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், உறவினர் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**துலாம்**  பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி புதிய முயற்சியெடுக்கும் நாள், ஆதாயம் தரும் வேலை ஒன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், எண்ணியது நிறைவேற ஆலயத்திற்கு செல்ல வேண்டிய நாள்.

**விருச்சிகம்**  சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், ரோக பயமுண்டு, எடுத்த காரியத்தை நிறைவேற்ற துடிப்புடன் செயற்படுவீர்கள்.

**தனுசு**  குடும்பத்தில் குதூகலம் கூடும், வருமானம் அதிகரிக்கும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் கூடும், ஆதாயம் தரும் தொழில்களில் அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்**  எடுத்த முயற்சிக்கு இல்லத்தாரின் ஒத்துழைப்பு கிடைக்கும், புத்திசாதுரியமாக பேசி காரியம் சாதிப்பீர்கள், பெண் தெய்வ வழிபாட்டால் பெருமையடைய வேண்டிய நாள்.

**கும்பம்**  ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், சொந்தபந்தங்களின் வருகையால் மகிழ்ச்சியடைவீர்கள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் நாட்டம் செல்லும்.

**மீனம்**  சொன்ன சொல்லைக் காப்பாற்ற சற்று அலைச்சல்கள் ஏற்படலாம், நண்பர்களின் வருகையுண்டு, சுப செலவுகள் அதிகரிக்கும், கோயில் வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.

வளவன்





யா/பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அதிபர் திருமதி எஸ்.சுந்தரேசன் உரையாற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வவுனியா மாவட்ட செயலகக் கணக்காளர் பாலகுமாரின் பாரியார் மாணவியொருவருக்கு பரிசில் வழங்குவதையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: கரவெட்டி செய்தியாளர்)

### உறவினைத்தேடி செயற்திட்டத்தின் கீழ்

# அநுராதபுரம் டி.எஸ். சேனநாயக்கா பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் யாழ். விஜயம்



(யாழ்ப்பாணம்)

உறவினைத் தேடி என்னும் செயற்றிட்டத்தின் கீழ் அநுராதபுரம் டி.எஸ்.சேனநாயக்க மாதிரி ஆரம்பப் பாடசாலையிலிருந்து ஆசிரியர்களும் மாணவர்களும் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலைக்கு வருகை தந்தனர்.

இதன் போது இம்மாணவர்கள் பல்வேறு கலைநிகழ்ச்சிகளை நடத்தினர்.

சிங்களப் பாடசாலையில் இருந்து வருகை தந்து தமிழ்ப் பாடசாலை ஒன்றில் தமது கலைநிகழ்ச்சிகளை நடத்தியமையானது எல்லோர் மனதிலும் இன ஐக்கியத்தை ஏற்படுத்தும் உறவுப்பாலமாக அமைந்திருந்தது.

இந்நிகழ்வில் அப்பாடசாலையிலிருந்து தரம் 4 ஐச் சேர்ந்த 42 மாணவர்களும் 16 ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது அங்கு உரை நிகழ்த்திய டி.எஸ்.சேனநாயக்க மாதிரி ஆரம்பப் பாடசாலையின் அதிபர் கருத்துத் தெரிவிக்கையில்,

உறவினைத்தேடி என்னும் செயற்றிட்டத்தில் நாம் உங்கள் பாடசாலைக்கு வந்துள்ளோம்.

அதேபோன்று நீங்களும் எமது பாடசாலைக்கு வருகை தாருங்கள். நீங்கள் எமது பாடசாலைக்கு வரும் போது நான் தமிழ் மொழியில் உங்களுடன் பேசுவேன் என தனது கருத்தினை ஆதங்கத்துடன் தெரிவித்தார்.

இதன்போது யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் வகுப்பறைச் செயற்பாடுகளையும் அவர்கள் பார்வையிட்டனர். இவ்வாறான செயற்றிட்டங்களை இளம் மாணவர்கள் மத்தியில் வளர்ப்பதன் மூலம் எதிர்காலத்தில் இன விரோதத்தை இல்லாமல் செய்து இன ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்த முடியும் என பலரும் அபிப்பிராயம் தெரிவித்தனர். (ஸ்ரீ-4)




## வருடாந்த விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

அருள்மிகு ஞான வைரவர் சனசமூக நிலைய ஆதரவில் பாலர் கல்விக்கழக நிர்வாகத்தின் கீழ் இயங்கும் முடமாவடி ஞானக் குழந்தை இல்லப்பாலர் பாடசாலையின் 11 ஆவது வருடாந்த விளையாட்டு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாலர் பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் செல்வி வசந்தி வீரமுத்து தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மேற்படி சனசமூக நிலைய உப தலைவரும் யா/செங்குந்த இந்துக் கல்லூரி அதிபர் இ.பாலகுமார், சிறப்பு விருந்தினராக யா/காசிப்பிள்ளை வித்தியாலய அதிபர் க.புஸ்பராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக பாலர் கல்விக்கழக பொருளாளரும் யா/கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியருமான பொ.ஆதீசன் கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன் கலை நிகழ்வுகளும் இடம் பெறும். (ஸ்ரீ-2)

### மருந்துக் கடையில் வைக்கப்பட்டிருந்த

# 20 பவுண் தங்க நகைகளும் 2 இலட்சம் பணமும் திருட்டு

யாழ்.நாவலர் வீதியில் அமைந்துள்ள பகவான் மருந்தகத்தில் நேற்று முன்தினம் இரவு 20 பவுண் மதிப்புள்ள தங்க நகைகளும் 2 இலட்சம் ரூபாய் பணமும் திருடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 9.00 மணிக்கு கடையைப் பூட்டிவிட்டு சென்ற பின்பே இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும், கடையை நேற்றுக்காலை 6.00 மணி அளவில் திறப்பதற்காக வந்த போதே இத்திருட்டு இடம்பெற்றுள்ளதை அறிந்ததாகவும் கடை உரிமையாளர் கூறினார்.

கதவை உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள் இரும்புப் பெட்டகத்தில் வைத்திருந்த 20 பவுண் தங்க நகைகளையும் 2 இலட்சம் ரூபாய் பணத்தையும் கொள்ளை அடித்துள்ளனர். இவை வங்கியில் வைப்பிலிடுவதற்காக வைக்கப்பட்டிருந்தன என அவர் மேலும் தெரிவித்தார். இது தொடர்பாக யாழ் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2,8)

# எழுவைதீவு முருகவேள் வித்தி. மாணவர்கள் நான்கு பதக்கங்கள் பெற்றுச் சாதனை



வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில் யா/ எழுவைதீவு முருகவேள் வித்தியாலய மாணவர்கள் 2 தங்கம் ஒரு வெள்ளி ஒரு வெண்கலப்பதக்கங்கள் என்பவற்றைப் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இவ் விளையாட்டுப் போட்டி வவுனியா தேசிய கல்வியற் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றுள்ளது.

இதில் 11 வயதுப் பிரிவு நீளம் பாய்தலில் ஜெ. ஜெனிற்றா தங்கப் பதக்கத்தை பெற்றதுடன் சிறந்த மைதான வீராங்கனையாகவும் தெரிவு செய்யப்பட்டார். 15 வயதுப் பிரிவு நீளம் பாய்தலில் ந. தர்சிகா வெள்ளிப் பதக்கத்தை பெற்றுக் கொண்டார். 17 வயதுப் பிரிவு உயரம் பாய்தலில் க. தனுஷன் தங்கப் பதக்கத்தை பெற்றுக் கொண்டதுடன் சிறந்த மைதான வீரனாகவும் தெரிவானார். 19 வயதுப்பிரிவு அரை மரதன் போட்டியில் ஜெ.மரிய கொறற்றி வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டுள்ளார். (ஸ்ரீ)

# மயானப் பகுதியில் வைத்து மாடுகள் வெட்டப்படுவதால் சுகாதார சீர்கேடு



(கரவெட்டி)

சட்டவிரோதமாக கடத்தப்பட்டு வரும் மாடுகள் கரவெட்டி ஞானாசாரியார் இந்து மயானத்தில் வைத்து இரவு வேளைகளில் வெட்டப்பட்டு வருதாக தெரிவிக்கப்படுகின்றது.

மாடுகளை வெட்டிய பின் அதன் கழிவுப் பொருட்கள் மயானத்தைச் சூழவுள்ள பகுதிகளில் வீசப்படுகின்றன. இதனால் கழிவுப் பொருட்களை ஏனைய பிராணிகள் இழுத்து வந்து தோட்ட வெளிகளில் போட்டுவிட்டுச் செல்கின்றன.

இச் செயற்பாடு காரணமாக அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதோடு அங்குள்ள சிவசாயிகள், பொதுமக்கள் சுகாதார சீர்கேட்டை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே, இப்பகுதியில் நடைபெறும் இச் சுகாதார சீர்கேட்டை தடுப்பதற்கு உரிய தரப்பினர் மிக விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-4-24)

# காணி பயன்பாட்டு திட்டமிடல் உத்தியோகத்தர் நியமனம்

(நல்லூர்)

காணி பயன்பாட்டுக் கொள்கை திட்டமிடல் திணைக்களத்தினால் பச்சிலைப்பள்ளி பளை பிரதேச செயலகத்திற்கு யசிந்த ராகவன், ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திற்கு எஸ். விசயநேசன், வேலணை பிரதேச செயலகத்திற்கு வே. கமலேந்திரன் ஆகியோர் காணி பயன்பாட்டு திட்டமிடல் உத்தியோகத்தர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

இவர்கள் முன்பு வடக்கு மாகாண காணி நிர்வாக திணைக்களத்தில் நிகழ்ச்சித் திட்டமிடல் உதவியாளர்களாக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-134)

## ஆசிய பாராளுமன்ற பிரதிநிதிகள் மாநாடு

(கொழும்பு)

சனத்தொகை மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஆசிய பாராளுமன்ற பிரதிநிதிகள் மாநாடு கொழும்பில் நேற்று ஆரம்பமாகியுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் ஆரம்பமான இந்த மாநாட்டில் 17 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் நாயகம் சரத் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆசியாவில் அண்மைக்காலமாக முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக ஒவ்வொரு நாடுகளும் தமது அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவுள்ளதாக அவர் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கைப் பிரச்சினை தொடர்பில் பாராளுமன்றில் கேள்வியெழுப்புவோம்

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செயலர் தெரிவிப்பு


(திருச்சி)

இலங்கை பிரச்சினை குறித்து பாராளுமன்ற கூட்டத்தொடரில் கேள்வி எழுப்பு வோம் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டி.ராஜா தெரிவித்துள்ளார்.

திருச்சியில் நேற்று முன்தினம் நிருபர்களுக்கு பேட்டியளித்த போது அவர் கூறியதாவது,

மும்பை குண்டுவெடிப்பு சம்பவத்தின் மூலம் உள்நாட்டு பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. உள்துறை அமைச்சர் சிதம்பரத்தின் வாய்ச்சொல்லில் காட்டும் திறமை அவரது செயற்பாட்டில் இல்லை.

உள்துறை அமைச்சு பயங்கரவாதத்தை கட்டுப்படுத்த தவறிவிட்டது. இன்னும் 2 வாரத்தில் பாராளுமன்ற கூட்டம் நடைபெறவுள்ளது. அதில் இந்தப் பிரச்சினை குறித்து கேள்வியை எழுப்புவோம்.



இதேவேளை இலங்கை பிரச்சினையில் சர்வதேச அளவில் விசாரணை நடத்த வேண்டும் என்பதில் இந்தியா மௌனமாக உள்ளது. இலங்கை பிரச்சினை என்பது தமிழக மக்களின் பிரச்சினை மட்டுமல்லாது தேசிய அளவிலான பிரச்சினை ஆகும்.

இதனையும் பாராளுமன்ற கூட்டத்தொடரின் போது கேள்வி எழுப்புவோம். கறுப் பணத்தை மீட்க இந்திய அரசு உறுதிப்பாடு இல்லாமல் உள்ளது. அமெரிக்கா, ஜேர்மனி அரசுகள் கறுப்பு பணத்தை மீட்க நடவடிக்கை எடுத்துள்ளது. ஆனால் , இந்திய அரசு தயக்கம் காட்டுகிறது. கறுப்பு பணம் நாட்டு மக்களுடைய பணம். இதனால் அதனை மீட்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.


மும்பையில் மக்கள் நெருக்கடி மிகுந்த பகுதியில் குண்டுவெடிப்பு நடந்துள்ள சம்பவம் உளவுத்துறை எச்சரிக்கையாக இல்லாததையும் .பாதுகாப்புத்துறை தயார் நிலையில் இல்லாததையும் காட்டுகிறது.

ஏற்கனவே, சிதம்பரம் நிதி மந்திரியாக இருந்த போது 2 ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் அவர் மீது தவறு இருக்கின்றது. தற்போது உள்துறை மந்திரியாக பணியாற்றும் போது அவரது செயற்பாடு திருப்தி இல்லை. இதனால் பிரதமர் மன்மோகன்சிங் தலையிட்டு சிதம்பரம் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கையில் போர் முடிந்து 2 ஆண்டுகள் ஆகியும் அங்கு இலங்கை தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு ஏற்படவில்லை. இலங்கையில் போரின்போது நடைபெற்ற மனித மீறல்களின் சி.டி.க்களை பார்த்து பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் நாடுகளின் வெளியுறவுத் துறை கண்டித்துள்ளது.

லோக்பால் சட்டத்தை விரைவில் கொண்டு வரவேண்டும். அதில் பிரதமரையும் விசாரிக்க வழிவகை செய்ய வேண்டும். நீதித் துறையின் நம்பகத்தன்மையை நிலைநாட்ட தேசிய நீதித்துறை ஆணையம் ஒன்றை அமைக்க வேண்டும் என்றார்.

(ஸ்ரீ-2)



யாழ். வண். கிழக்கு கலட்டி எச்சாட்டி மாரியம்மன் மணிமண்டபத்தை இலங்கைக்கான முன்னாள் கனேடிய தூதுவர் பூலோகசிங்கம் திறந்து வைப்பதையும் படத்தில் காணலாம்.


சாவகச்சேரி நகரசபை உள்ளூராட்சித் தேர்தல்

23.07. 2011





திரு.பரமசாமி சிறீதரன்

(பிரபல வர்த்தகர்-மீசாலை)

விருப்பு வாக்கு இலக்கம்- 12

அன்பான வாக்காளப் பெருமக்களே!

தமிழ்த் தேசியத்தின் ஒற்றுமையை வலுப்படுத்தவும் தமிழினம் உரிமையுடன் கூடிய அபிவிருத்தி காணவும் தமிழர் என்றால் அது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பே-என எடுத்துக் கூறவும் நம் நகர் நம் வசமாவதற்கும் உங்கள் வாக்கு வீட்டிற்கே! தமிழரசுக் கட்சியின் வெற்றி தமிழினத்தின் வெற்றி! உங்கள் வாக்குகளை தன்மானக் கட்சியாம் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்திற்கு இட்டு உங்கள் விருப்பு வாக்குகள் மூன்றையும், எனது இலக்கமான 12 இற்கு புள்ளடியிட்டும் சாவகச்சேரி நகர சபைக்கு என்னை தெரிவு செய்யும்படி வேண்டுகின்றேன்.

திரு.ப.சிறீதரன் (மீசாலை)

இலங்கைத் தமிழரசுக் கட்சி

(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

X 12 X X

(3717)



பருத்தித்துறை நகரசபைத் தேர்தல்

23.07.2011







பருத்தித்துறை ஆதார
வைத்தியசாலை
அபிவிருத்திக்
குழு உறுப்பினரும்,
பருத்தித்துறை நகரசபை
ஆலோசனைக் குழு உறுப்பினருமான
திரு.கதிர்காமத்தம்பி சிவராஜா
அவர்களை ஆதரித்து
உங்களின் பொன்னான வாக்குகளை
இட்டு அவரின் அமோக வெற்றியை
உறுதிப்படுத்துங்கள்.

"சேவையே அவரின் எண்ணம்"

கதிர்காமத்தம்பி சிவராஜா

(சமூக சேவையாளர்)

இலங்கைத் தமிழரசுக் கட்சி

(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

X 2 X X

(3716)

இலங்கைத் தமிழரசுக் கட்சி



மு/திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்திற்கு வலயக் கல்வித் திணைக்களத்தினால் பியானோ அண்மையில் வழங்கப்பட்டது. இதனை ஆசிரிய ஆலோசகர் தேவகாந்தன் ஆரம்பித்து வைப்பதையும் அருகில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அபிராமி, பாடசாலை அதிபர், மாணவர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## அமெரிக்காவில் வேலைவாய்ப்பு பெற்று தருவதாக கூறி நிதிமோசடி

## இருவர் பொலிஸாரால் கைது

ஐக்கிய அமெரிக்காவுக்கான வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக அனுப்புவதாகக் கூறி மதகுரு வேடம் பூண்டு வடகிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் இளைஞர், யுவதிகளை ஏமாற்றி இரண்டு கோடிக்கும் மேற்பட்ட பணத்தை பெற்றுக் கொண்டு தலைமறைவாகிய இரு சந்தேக நபர்களை கம்பளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சந்தேக நபர்கள் இருவரையும் பொலிஸார் கம்பளை பிரதம நீதிவான் உபாலி குணவர்த்தன முன்னிலையில் ஆஜர்படுத்திய போது அவர்களை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இவ்விருவரும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, ஹற்றன், கம்பளை மற்றும் சிலாபம் முதலான பகுதிகளுக்கு காலத்திற்குக் காலம் சென்று இளைஞர், யுவதிகளை ஏமாற்றி வந்துள்ளதாக பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

மேலும் இவர்கள் தமது முகவர்களை பிரதேசங்களில் நியமித்து பணத்தை அறவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2-4)

### வவுனியா சிறைக் கைதிகளின்

## உண்ணாவிரதப் போராட்டம் 8ஆவது நாளாக தொடர்கிறது

(வவுனியா)

வவுனியா சிறையில் நீண்டநாட்களாக எதுவித விசாரணையுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள 4 அரசியல் கைதிகள் தங்களின் விடுதலையை வலியுறுத்தி கடந்த 11ஆம் திகதி தொடக்கம் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து கடந்த 16 ஆம் திகதியில் இருந்து குறித்த சிறைச்சால்லயில் உள்ள ஏனைய 40 தமிழ் அரசியல் கைதிகளும் இவர்களுடன் இணைந்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களில் கட்டையன் லோகேஸ்வரன் என்பரின் உடல்நிலை மிகவும் மோசமடைந்துள்ளதாகவும் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேநேரம் நேற்று அதிகாலை 2 மணியளவில் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் அங்கு விஜயம் செய்து கைதிகளைப் பார்வையிட்டதுடன் சகல அரசியல் கைதிகளினுடைய அறிக்கைகளையும் துரிதமாக சமர்ப்பிக்கும்படி சட்டமா அதிபரிடம் தான் கேட்டுக் கொண்டுள்ளதாகவும் அப்போது அவர் தெரிவித்ததாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2-4)

## இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு 13 ஆவது திருத்தமே நிரந்தர தீர்வாக அமையும்

### சிரேஷ்ட அமைச்சர்கள் கருத்து

இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தத்தை அமுல்படுத்துவதே நிரந்தர தீர்வாக அமையும் என அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதிகாரப் பகிர்வு ஊடாக இலங்கையில் வாழும் சிறுபான்மை மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தத்தை செயற்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி விரைவில் கவனம் செலுத்துவார் என தான் நம்புவதாக அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி தெரிவித்தார்.

இது குறித்து ஆராய்வதற்காக ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ குழுவொன்றை அமைத்துள்ளதாகவும் அக்குழுவினூடாக துரித நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் வாழும் அனைத்து மக்களும் பிரச்சினை இன்றி வாழ்வதற்கு இந்த முயற்சிகள் வழிவகுக்கும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சர் தயாரத்ன தெரிவிக்கையில்,

13 ஆவது திருத்தத்தை செயற்படுத்துவதன் மூலம் இலங்கையின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்ற நிலைப்பாட்டிலேயே தான் நீண்டகாலம் இருப்பதாக தெரிவித்தார்.

இந்த திருத்தத்திற்கு அமைவாக வழங்கப்படும் அதிகாரப் பகிர்வு இலங்கையில் வாழும் அனைவரையும் திருப்தியடைய செய்யும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக நாடாளுமன்ற தெரிவுக்குழு ஒன்றின் மூலம் ஆராய்வது சிறந்த பலனைத் தரும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஸ்ரீ-2-4)

## பணிப்பெண்ணை பதிவின்றி தொழிலில் ஈடுபடுத்திய நிறுவனத்திற்கு தடை

(கொழும்பு)

இலங்கையின் பணிப்பெண் ஒருவரை பதிவு செய்யாமல் தொழிலில் ஈடுபடுத்தியமைக்காக பஹ்ரைய்னின் தொழில் நிறுவனம் ஒன்று தடை செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைப் பணிப்பெண் ஒருவர் பஹ்ரைய்னில் உள்ள ஆட்சேர்ப்பு நிறுவனத்தினால் பணிக்கான உடன்பாட்டு அடிப்படையில் அழைக்கப்பட்டனர்.

இந்தப்பெண் கடந்த மாதம் தமது தொழில் தருனரின் துன்புறுத்தலை அடுத்து தப்பிக்கும் முகமாக மாடியிலிருந்து பாய்ந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அவருக்கு காயங்கள் ஏற்பட்ட நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த நிலையில் பஹ்ரைனில் உள்ள இலங்கை தூதரக அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்தனர்.

இதன்போது குறித்த பெண் அவரை அழைத்த ஆட்சேர்ப்பு நிறுவனத்தினால் பதிவுசெய்யப்படவில்லைஎன்பது தெரியவந்தது.

இதனையடுத்தே குறித்த நிறுவனத்தை கறுப்புப்பட்டியலிட ஆலோசிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)




காரைநகர்-திண்ணபுரம்

**திருவருள்மிகு ஸ்ரீ சௌந்தராம்பிகா சமேத சுந்தரேஸ்வரப் பெருமான் திருக்கோவில் (ஈழத்துச் சிதம்பரம்)**

மண்டல மஞ்சன பூர்த்தி

ஏகாதச ருத்ர ஹோம நவகுண்ட சஹித கலசாபிஷேக (1008)

உற்சவ விஞ்ஞாபனம்- 20.07.2011 (புதன்கிழமை)

### கிரியா கால விபரம்

**ஆடிமாதம் 2 ஆம் நாள் (18.07.2011) திங்கட்கிழமை மாலை 5.00 மணி**

ஸ்ரீ விநாயகர் வழிபாடு, புண்ணியாகவாசனம், அனுக்ஜை, ரட்சாபந்தனம், கடஸ்தாபனம், யாகபூஜை, நவாக்கினி பூஜை, ஏகாதச ருத்ர பாராயணம், தீபாராதனை, பிரதக்ஷண நமஸ்காரம், திருவருட் பிரசாதம் வழங்கல்.

**ஆடிமாதம் 3 ஆம் நாள் (19.07.2011) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி**

ஸ்ரீ விநாயகர் வழிபாடு, புண்ணியாகவாசனம், யாக பூஜை. நவாக்கினி பூஜை, ஏகாதச ருத்ர ஹோமம், விசேட உபசார ஹோமம், தீபாராதனை, பிரதக்ஷண நமஸ்காரம், திருவருட் பிரசாதம் வழங்கல்.

**மாலை 5.00 மணி**

ஸ்ரீ விநாயகர் வழிபாடு, புண்ணியாக வாசனம், யாக பூஜை, விசேட திரவிய ஹோமம், தீபாராதனை, பிரதக்ஷண நமஸ்காரம் , திருவருட் பிரசாதம் வழங்கல்.

**ஆடி மாதம் 04 ஆம் நாள் (20.07.2011) புதன்கிழமை காலை 7.00 மணி**

ஸ்ரீ விநாயகர் வழிபாடு, புண்ணியாக வாசனம், யாகபூஜை, நவாக்கினி வழிபாடு, மஹா பூர்ணாகுதி ஹோம சமர்ப்பணம், தீபாராதனை, பிரதக்ஷண நமஸ்காரம், வேத, ஸ்தோத்திர, ஆசீர்வசன, திருமுறை பாராயணம், திரவிய அபிஷேகம், கலசாபிஷேகம், சங்காபிஷேகம், விசேட தீபாராதனை, தீர்த்த பிரசாதம் வழங்கல், ஆசீர்வாதம். (அன்னதானம் நடைபெறும்.)

**மாலை 6.00 மணி**

சாயரட்சை பூஜை தொடர்ந்து வசந்தமண்டப பூஜை, வேதஸ்தோத்திர, திருமுறை பாராயணம், சுவாமி திருவீதியுலா, திருவருட் பிரசாதம் வழங்கல்.

**20.07.2011 காலை 11.00 மணியளவில் விநாயக புராணம் நூல் வெளியீடு பேராசிரியர் இ.குமாரவடிவேல் (யாழ். பல்கலைக்கழகம்) தலைமையில் நடைபெறும்.**

நூலின் விபரம்: விநாயகரின் திருவிளையாடலை எல்லோரும் அறிந்து வாசித்து அருளாசி பெறும்படியாக A 5 அளவு, 1086 பக்கங்கள், 70Gsm வெள்ளை அச்சடித்தல் தாளில் 12 புள்ளி எழுத்தில் அச்சடிக்கப்பட்டு, தடித்த மட்டையும் அருளானந்தப் பிள்ளையார் வர்ணப்படத்துடன் கூடிய வெளியுறையும் கொண்டதாக இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

(நூலின் விலை ரூபா 1500/-)

### நிகழ்ச்சி நிரல்

**தேவாரம்**
திரு.மு.சுந்தரலிங்கம்
ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான ஆதீனகர்த்தா

**தலைமையுரை**
பேராசிரியர் இ.குமாரவடிவேல்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**ஆசியுரை**
பிரம்மச்சாரி ஜாக்கரத் சைதன்ய சுவாமிகள்
சின்மயாமிஷன், வடமாகாணம், இலங்கை.

**வெளியீட்டுரை**
சைவப்புலவர் ஏ.அனுசாந்தன்

**அறிமுகவுரை**
திரு.க.இரகுபரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

அன்பர்கள் நூற் பிரதி பெறுதல்

**நன்றியுரை**
செம்மொழிச் செல்வி, சிவநெறிப் பிரசாரகர், தமிழ்த் திலகம்.
பண்டிதை யோகலட்சுமி சோமசுந்தரம் BA.Dip.in. Ed.

(5401)

குறிப்பு:- அடியார்கள் பால், இளநீர், புஷ்பம், அபிஷேக பூஜா, ஹோம திரவியங்களை உபகரித்து மேற்படி நிகழ்வுகளில் கலந்துகொண்டு சிவப்பிரசாதம் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வீர்களாக.

"தென்னாடுடைய சிவனே போற்றி என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி"

இவ்வண்ணம்
அ.அம்பலவிமுருகன், மு.சுந்தரலிங்கம்,
ஆதீனகர்த்தாக்கள்.

காரைநகர்.





மண்டைதீவு பிரதேசத்திற்கான நீர் விநியோகம் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் நீர் விநியோகம் ஆரம்பித்து வைக்கப்படுவதையும் கலந்து கொண்ட பொது மக்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- என்.குமார்)

# தேர்தல் காலங்களிலேயே இலங்கை அகதிகளின் வருகை அதிகரித்துள்ளது

## நியூசிலாந்து ஊடகம் தெரிவிப்பு

(கொழும்பு)

நியூசிலாந்தில் தேர்தல்கள் இடம்பெறும் வருடங்களிலேயே இலங்கை உள்ளிட்ட நாடுகளில் இருந்து அகதிகள் வருவதாக நியூசிலாந்து நஷனல் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் நியூசிலாந்து மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அந்தப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

இதேபோன்ற நோக்கத்தையே தற்போது இந்தோனேசியா வழியாக நுழைய முனையும் 87 அகதிகளும் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை அகதிகள் தமது நாட்டுக்கு வருவதற்கான தேவையேற்படுவதற்கு எந்தவித ஆதாரங்களும் இல்லை என குடிவரவுத்துறை அமைச்சர் ஜொனத்தன் கொல் மன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# 29 வருடங்களின் பின் முல்லைத்தீவு கச்சேரியில் வாக்கெண்ணும் பணிகள்

(கொழும்பு)

1982 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த முறை முதற்தடவையாக முல்லைத்தீவு கச்சேரியில் வாக்குகள் எண்ணும் நடவடிக்கைகள் நடைபெறவுள்ளதாக அந்த மாவட்டத்தின் அரசாங்க அதிபரும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருமான ஏ.பத்திநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு,துணுக்காய் பிரதேச சபையில் 9 அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பிரஜைகள் முன்னணி ஆகிய கட்சிகள் போட்டியிடுகின்றனவெனவும் அவர் கூறினார்.

கடந்த 2010ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பின் பிரகாரம் துணுக்காய் பிரதேச சபையில் 5 ஆயிரத்து 227 மக்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இதற்காக 6 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்புப் பகுதிகளில் மீள்குடியேற்றப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளமையால் இதற்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த மார்ச் மாதம் முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேச சபைக்கான உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# 87 இலங்கை அகதிகளையும் இந்தோனேசியா மீள அனுப்பாது

## மலேசியா பினாங் மாநில முதல்வர் தெரிவிப்பு

87 இலங்கை அகதிகளை இந்தோனேசியா மீள அனுப்பாது என தாம் எண்ணுவதாக மலேசியாவின் பினாங் மாநில பிரதி முதல்வர் பி.ராமசாமி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தமது ஆட்புல எல்லைகளில் ஒருமைப்பாட்டை பாதுகாக்க வேண்டிய உரிமை இந்தோனேசியாவிற்கு இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த அகதிகள் தொடர்பில் மனிதாபிமான அடிப்படையில் செயற்படுவது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர தற்போது இலங்கையில் சுமுக நிலை தோன்றியிருப்பதும் நோக்கத்தக்கது எனவும் பினாங் மாநில பிரதி முதல்வர் இராமசாமி குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகளை பாதுகாக்க வேண்டியது அனைவரதும் பொறுப்பு

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியது அனைவரினதும் பொறுப்பு என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சமய நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே எதிர்க்கட்சி தலைவர் இதனைத் தெரிவித்தார்.

சுதந்திர வர்த்தக வலயத்தில் இடம்பெற்ற மோதலில் உயிரிழந்த ரொஷான் சானக்கவின் குடும்பத்தினருக்கும் காயமடைந்தவர்களுக்கும் நியாயம் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திப்பதாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அங்கு கருத்து வெளியிட்ட ரணில் விக்ரமசிங்க தொழிலாளர்களின் எதிர்காலத்தை பாதுகாப்பதற்காகவே ரொஷான் சானக்க உயிர்த் தியாகம் செய்ததாகக் கூறினார்.

தொழிலாளர் வர்க்கத்தினரின் உரிமைகளை எவராலும் மறுக்க முடியாது எனவும் அவர்களின் உரிமையை மேலும் வலுப்படுத்த வேண்டுமே தவிர குறைக்கக்கூடாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

# ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் அமர்வு நாளை

ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அமர்வு நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ளதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த அமர்வின் போது இறக்குமதி செய்யப்பட்ட தரம் குறைந்த பெற்றோல் தொடர்பாக விரிவாக ஆராய்வுள்ளதாக கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பாக நாடாளுமன்ற தெரிவுக்குழு ஒன்று நியமிப்பது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த விடயம் குறித்து ஆராய கனிய எண்ணெய் வளத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மூன்று உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்றை நியமித்துள்ளார்.

இலங்கை மின்சார சபையின் செயலாளரின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்த குழுவினர் தரங்குறைந்த பெற்றோல் இறக்குமதி தொடர்பாக விரிவாக விசாரணைகளை மேற்கொள்வர் என அமைச்சர் தெரிவித்தார்.

இந்தநிலையில் இந்தகுழுவின் அறிக்கை எதிர்வரும் இரண்டு வார காலத்திற்குள் அமைச்சரிடம் கையளிக்கப்படும் என பிரதியமைச்சர் சரண குணவர்த்தன தெரிவித்தார். (ஸ்ரீ-2)


பருத்தித்துறை பிரதேசசபை-2011

உள்ளூராட்சி சபைத் தேர்தல் 23.07.2011



அன்பான வாக்காளர் பெருமக்களே! உங்கள் பொன்னான வாக்குகளை தமிழரசுக்கட்சியின் வீட்டுச் சின்னத்திற்கும் எனது இலக்கமாகிய 7இற்கும் புள்ளடியிட்டு என்னை அமோக வெற்றி பெற செய்யுங்கள்

இலங்கைத் தமிழரசுக் கட்சி

(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

X 7

பூபாலசிங்கம் சஞ்சீவன்

(3715)



பூநகரி பிரதேச சபைத் தேர்தல்

23.07.2011

தமிழ் மக்களுக்கு நல்ல விடிவை சர்வதேசம் ஏற்படுத்தவுள்ள இத்தேர்தலில் தமிழ்பேசும் அன்பர்கள் அனைவரும் வீட்டுச் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும். பூநகரிப் பிரதேச அன்பர்கள் உணர்வுடன் உதய சூரியனுக்கு புள்ளடியிடவேண்டும். விருப்பு வாக்குகளை 9க்கும் மற்றும் இரு வாக்குகளை 1 தொடக்கம் 13 வரையுள்ள இரு இலக்கங்களில் எவற்றிக்கும் புள்ளடியிடலாம்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி

தமிழர் விடுதலைக் கூட்டணி

X 9



பொன்னம்பலம் சிறீஸ்கந்தராசா

(3714)





வடமராட்சி மாலுசந்தை ஸ்ரீ வரதராஜர் ஆலய தேர் உற்சவம் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பக்தர்கள் தேர் இழுப்பதையும் அடியார்கள் அங்கப் பிரதட்சனை செய்வதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-கரவெட்டி செய்தியாளர்)

# விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள வண்ணார் பண்ணை பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை பிறவுண் வீதி, கலட்டிச் சந்தியிலும் காலை 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை வீரகத்தி பிள்ளையார் கோவிலடி சீனியர் ஒழுங்கையிலும் வைத்து வழங்கப்படவுள்ளது. நாளை புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை காமாட்சி பாலர் பாடசாலையிலும் காலை 11.30 மணிதொடக்கம் பி.ப. 1.30 மணிவரை கலட்டி இராமநாதன் வீதியில் அமைந்துள்ள மெதடிஸ்த மிசன் பாடசாலையிலும் வைத்து வழங்கப்படவுள்ளது.

எனவே, இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி ஊசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரிய தாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# போர்க்குற்ற விசாரணைக்கு வலியுறுத்தும் நாடுகளுடனான உறவை துண்டிக்க வேண்டும்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு

இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற விசாரணைக்கு இந்தியாவும் அமெரிக்காவும் தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்குமானால் அந்த நாடுகளுடனான சகலவிதமான உறவுகளையும் அரசாங்கம் உடனடியாகத் துண்டிக்க வேண்டும்.

ஏனென்றால் துரோகிகளுடன் நட்பு வைத்துக் கொள்வது என்றும் ஆபத்தாகவே அமையும் என்ற தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.பயங்கரவாதத்திற்கு எதிராக இலங்கை அடைந்த வெற்றியை பொறுத்துக் கொள்ள முடியாமல் சர்வதேசம் பகை தீர்க்க முயற்சிக்கின்றது.

இதுகுறித்து அதன் தலைவர் குணதாச அமரசேகர தெரிவிக்கையில்,

உள்நாட்டு யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவந்த இலங்கை இராணுவத்தின் தியாகபூர்வமான மனிதாபிமான நடவடிக்கை சர்வதேச நாடுகளுக்கு போர்க்குற்றச் செயல்களாகத் தெரிகின்றது.

இன்று இலங்கையில் சகல இன மக்களும் சமாதானத்துடனும் ஒற்றுமையுடனும் வாழ்வதற்கு எமது இராணுவத்தின் தியாகங்களே காரணமாகும். ஆனால் இந்தத் தியாகங்களை உதாசீனம் செய்யும் வகையில் இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் நடந்து கொள்கின்றன.பான் கீ மூனின் தலைமையிலாலான நிபுணர் குழு உறவுகளை இரத்துச் செய்ய வேண்டும்.

போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக இலங்கை மிகவும் வெளிப்படையாக செயற்பட்டு வருகின்றது.ஆனால் அதனை ஏற்றுக் கொள்ளாது விசாரணை செய்யுமாறு கோருவது குற்றத்தை ஒப்புவிக்க எடுக்கும் முயற்சியாகவே அமைகின்றது.

இந்தியா இலங்கையின் அயல்நாடு மட்டுமல்ல நீண்டநாள்நண்பனும் கூடவாகும். இவ்வாறான நிலையில் இலங்கை மீது நம்பிக்கை வைக்காமை ஏற்றுக் கொள்ளக் கூடியதொன்றல்ல என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# புலிப் பற்கள் வைத்திருந்த நபர் கைது

புலிப்பற்கள் மூன்றை வைத்திருந்த ஒருவர் கஹடகஸ்தெலிய பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபர் பொல்பித்திகம பிரதேசத்தைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப் படுகிறது.

நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நேற்று அநுராதபுரம் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற அமர்வில் ஆளும், எதிர்க்கட்சி முக்கியஸ்தர்கள் பங்கேற்பு

(கொழும்பு)

பிரித்தானியாவில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற அமர்வில் ஆளும், எதிர்க்கட்சி முக்கியஸ்தர்கள் பங்கேற்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க , தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன், சபாநாயகர் சமல் ராஜபக்ஷ மற்றும் அவைத் தலைவர்கள் நிமால் சிறிபால டி சில்வா ஆகியோர் அமர்வில் பங்கேற்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கபீர் ஹஷீம் மற்றும் ஜயலத் ஜயவர்த்தன ஆகியோரும் இந்த அமர்வில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அமர்வுகளில் கண்காணிப்பாளராகக் கலந்து கொள்ள விரும்புவதாக ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

எனினும் இந்தக் கோரிக்கைக்கு அனுமதியளிக்க முடியாது எனவும் கண்காணிப்பாளர்களை அனுப்பி வைக்கமுடியாது எனவும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க கித்துலேகொட தெரிவித்துள்ளார்.

திட்டமிட்டவாறு அமர்வுகளில் பங்கேற்க தீர்மானித்துள்ளதாக ஜயலத் ஜயவர்த்தன குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# வாக்கெண்ணும் நிலையங்களுக்கு கட்சி பிரதிநிதிகளை நியமிக்க அனுமதி

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெண்ணும் நிலையங்களில் கட்சிப் பிரதிநிதிகளாக வேட்பாளர்கள் பங்கேற்பதற்கு ஏற்ற வகையில் நடைமுறைகளை உருவாக்குவதற்கு தேர்தல் செயலகம் தீர்மானித்துள்ளது.

மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளருடன் நேற்று மாலை இடம்பெற்ற சந்திப்பின் போது இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக தேர்தல் செயலகத்தின் ஆலோசகர் பந்துல குலதுங்க தெரிவித்தார்.

வாக்கெண்ணும் நிலையங்களுக்கு ஒவ்வொரு கட்சியையும் பிரதிநிதித்துவப்படுத்தும் தலா ஐந்துபேரை நியமிப்பதறகு தேர்தல் ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

இந்தப் பிரதிநிதிகள் குழுவில் வேட்பாளர்களை உள்ளடக்குவதற்கு சில தொகுதி அமைப்பாளர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை எனக் கிடைத்த முறைப்பாடுகளை கருத்திற் கொண்டு இந்தப் புதிய தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தைச் செயற்படுத்துவதற்கு கட்சிச் செயலாளர்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# விலை பொறிக்கப்படாத விளம்பரங்களை காட்சிப்படுத்தியோருக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

விலை பொறிக்கப்படாத வர்த்தக விளம்பரங்களை காட்சிப்படுத்தியோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு நுகர்வோர் அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

பல்வேறு பகுதிகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பாரியளவிலான பதாகைகள், அறிவித்தல்கள் மற்றும் சுவரொட்டிகள் ஆகியனவும் இதில் அடங்குவதாக அதிகாரசபையின் தலைவர் ரூமி மர்ஷுக் தெரிவித்துள்ளார்.

விலை பொறிக்கப்படாத விளம்பரங் களை இனங்காண்பதற்கான நடவடிக்கைககள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

நுகர்வோர் சட்டத்தின் 26ஆவது சரத்திற்கு அமைய அனைத்து வர்த்தக விளம்பரங்களிலும் குறித்த பொருளின் விற்பனை விலை பொறிக்கப்பட வேண்டியது கட்டாயப் படுத்தப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்கமைய வர்த்தக விளம்பரங்களில் விலைகளை காட்சிப்படுத்துவதற்கு அனைத்து வர்த்தகர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஸ்ரீ-2)

# ஹெஜின் உடன்படிக்கையுடன் தொடர்புடைய அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை

## அமைச்சர் சுசில் தெரிவிப்பு



(கொழும்பு)

பாரிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள ஹெஜின் உடன்படிக்கையுடன் தொடர்புடைய அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற்று அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பெற்றோலியத்துற்ற அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

5 ஆயிரம் கோடி ரூபா வரை செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளதும் நாட்டிற்கு பெரும் இழப்பை கொடுத்துள்ளதுமான ஹெஜின் உடன்படிக்கையுடன் தொடர்புடைய அதிகாரிகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இது குறித்து கேட்டபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஸ்டான்டர்ட் சார்ட்டர்ட் வங்கிக்கு 162 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்த வேண்டும் என லண்டனில் உள்ள வணிக நீதிமன்றம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு உத்தரவிட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் போது துறைக்கு பொறுப்பான அமைச்சராக ஏ.எச்.எம்.பௌசி இருந்ததால் தற்போதைய அமைச்சர் என்ற வகையில் தான் சட்டமா அதிபரின் ஆலோசனைகளை பெற நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பிரேமஜயந்த குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை லண்டன் நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக தற்போது மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் எரிபொருள் இறக்குமதி தொடர்பான அனைத்து விடயங்களுக்கு சட்டமா அதிபரின் ஆலோசனைகளை பெற நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)



மக்கள் வங்கியின் பொன்விழாவினை முன்னிட்டு புதிய கணக்குஆரம்பித்த வாடிக்கையாளருக்கு வல்வெட்டித்துறைக் கிளையின் உடுப்பிட்டி சேவை நிலைய முகாமையாளர் திருமதி. மதனராணி யோகராசா மரக்கன்று வழங்கு வதையும் அருகில் உத்தியோகத்தர் செல்வி. உதயசாந்தி பாலசுந்தரம் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# உற்றறி கோட்பாடு

## பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுப் பேருரை

01


பேராசிரியர் சபா ஜெயராசா

### உற்றறி கோட்பாட்டின் விளக்கம்:

ஆங்கில மொழியில்Critical Theory என்பதற்குரிய தமிழ் வடிவமாக "உற்றறி கோட்பாடு" என்பதைப் பயன்படுத்தலாம். இக்கோட்பாடு பற்றிய வரைவிலக்கணம் பின்வருமாறு தரப்படுகின்றது*A way tothinking about and examining culture and literature by concdering the social,historical force that affact it make it the way it is* சமூகம், வரலாறு மற்றும் கருத்தியல் விசைகள் பண்பாடு மற்றும் இலக்கிய ஆக்கங் களில் எவ்வாறு தாக்கங்களை ஏற்படுத்ததுகின்றன என்பது பற்றியும் அதன் எழுவழியை எவ்வாறு உருவாக்குகின்றன என்பது பற்றியும் சிந்திப்பதற்கும் பரிசீலனை செய்வ தற்குமான வழிவகையினை இந்தக் கோட்பாடு அமைத்துத் தருகின்றது.

*கலை இலக்கியம் பற்றிய நவ மார்க்சியச் சிந்தனைகளிலிருந்து மேலெழுந்த உயர்ச்சியாக உற்றறி கோட்பாடு* வளர்ந்துள்ளது. மார்க்சிய அழகிற் சிந்தனைகளை வளர்த்துச் சென்ற பிராங்போட் சிந்தனா கூடத்தினர் உற்றறி கோட்பாட்டை வளர்த்து வலுவூட்டினர்.

### உற்றறிகோட்பாடு இலக்கியங்களை விளங்கிக்கொள்வதற்குரிய வழிமுறையாதல்

*தமிழ் வரலாறு, உயர்கல்வி வரலாறு, கலைவரலாறு, பண்பாட்டு வரலாறு ஆகிய துறைகளிலே தனித்துவமான புலமைப்பங்களிப்பை வழங்கியவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள்.*

*தமிழர் சால்பை ஆழ்ந்து விரவிய ஆய்வுகள் வழியாக வெளிக் கொண்டு வந்து தனித்துவம் பதித்தவர். உயர்கல்வியிலே தமிழ்மொழியை ஏற்றம் பெறச் செய்த முன்னோடிகளில் ஒருவராக விளங்கினார். உயர்நிலையில் தமிழ் மொழிவழியான ஆய்வுகளின் தராதரத்தை உயர்த்துவதிலே நேரடியாகப் பங்கு கொண்டு உழைத்த புலமையாளர்.*


*எழு குழாத்தினருக்கு(Elites) மட்டுமே உயர்கல்வி என்றிருந்த மேலாதிக்கத்தைத் தகர்ப்பதில் ஈடுபட்ட மானிடப் பண்பின் உறைவிடமாகவும் அவர் விளங்கினார். அத்தகைய வினைப்பாட்டின் ஒரு பரிமாணமே நாட்டார் கூத்துக்களைப் பல்கலைக் கழக அரங்கினுக்கு எடுத்துச் சென்றமையாகும்.*

பழமையில் ஆழ்ந்து கால்பதித்து நின்ற பேராசிரியர் புதுமைகளை உள்வாங்கி உள்ளமைத்து செம்மொழி நிலையிலும் நவீன நிலையிலும் தமிழியல் ஆய்வுகளை வளம்படுத்துவதற்குத் துணைநின்றார். நவீன ஆய்வு முறைகளும் தமிழிலே வளம்பெறுவதற்கு உழைத்த முன்னோடிப் புலமையாளருள் ஒருவராக விளங்கினார். தமிழ் தேசியத்தை கருத்து நிலையிலும் செயல் நிலையிலும் முன்னெடுத்த அவரின் வினைப்பாடுகள் உலகத் தமிழ் ஆய்வு மன்ற இயக்கத்தில் முனைப்பெழல் கொண்டு முடிசூடியது.

அவரின் புலமைப்பணிகளையும் சமூகப்பணிகளையும் கல்விசார்ந்த அமைப்பியற் பணிகளையும் சிறப்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவாக்கற் பணிகளையும் நினைவு கூர்ந்து இந்த உரை அளிக்கை செய்யப்படுகிறது.

உற்றறி கோட்பாடு சமூகவியற் சிந்தனைகளை அடியொற்றி வளர்ச்சியுற்று வந்தது. *எவற்றையும் சமூக வரலாற்றுப் பின்புலத்தில் ஊடுருவி ஆராய்ந்து. பொருத்தமான தீர்மானங்களைப் புறநிலையாக மேற்கொள்ளல் உற்றறி கோட்பாட்டின் மையப் பொருளாகின்றது.* உற்றறிதலை ஆழ்ந்து மேற்கொள்ளும் எந்தவொரு கோட்பாட்டையும் உற்றறி கோட்பாடு என்று பொதுமைப்படுத்தும் "கவிப்புச்சொல்லாகவும்" இதனைப் பயன்படுத்துகின்றனர்.

கலை, இலக்கிய நிலையில் உற்றறி கோட்பாடு சமூகவிஞ்ஞானம் மற்றும் மானிடப்பண்பியல் முதலாம் துறைகளிலிருந்து தருக்க நிலைப் பட்ட கருத்துக்களை உள்வாங்கி அழகியற் பரிசீலனைகளையும் தீர்மானங்களையும் மேற்கொள்ளும் அறிகைச் செயற்பாடாகக் கொள்ளப்படுகின்றது.


பேராசிரியர் சு.வித்தியானந்தன்

மேலும் நுண்ணியதாக உற்றறி கோட்பாட்டிற்கு விளக்கம் தரப்படுகின்றது. மார்க்சிய நேர்ச் சிந்தனைகளிலிருந்து பெறப்பட்ட பொருத்தமான நேர்க் கருத்துக்களையும் உள்ளடக்கிக் கலை இலக்கியங்களையும் குறியீட்டு வெளிப்பாடுகளையும் விளக்குதல், மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகிய வற்றை உற்றறி கோட்பாட்டில் உள்ளடக்கப்படுகின்றது. ஒரு வகையில் "கலை கலைக்காக" என்ற சமூகப்புறக் கணிப்பு வாதத்துக்கு எதிராக எழுந்த கருத்தியலாக்கமாக இது அமைந்தது.

இக்கோட்பாட்டு அகநிலையிலும் புறநிலையிலும் சமூக இயக்கத்தை நிராகரித்து தூய அழகியல் வாதத்தை வலியுறுத்துகின்றது.

(தொடரும்)

# நோய்பரப்பும் நுளம்புகளில் ஆய்வு

12

இந்நூலினை உசாத்துணையாக கொள்வோருக்கு பிறிற்றோ குறியீடு எப்படிக் கணிக்கப்படுகிறது என்பதை இங்கு தரப்படல் பயனுற்றதாக இருக்குமென எதிர்பார்க்கிறோம். இது பின்வருமாறு கணிக்கப்படுகிறது. டெங்கு பரவுகின்ற ஒரு பிரதேசத்தில் முக்கியமாக நகரத்தையும் அதை அண்டிய பகுதியையும் கருத்திற்கொண்டு மொத்தக் கடைகள், வீடுகள் தொழிற்சாலைகள் அடங்கலாக டெங்குக் குடம்பிகள் கண்டுபிடித்த கடைகள் வீடுகள் எண்ணிக்கையைப் பிரித்து மொத்தப் பொருட்களின் எ்ண்ணிக்கையின் மேல் மொத்தப்பொருட்களில் டெங்குக் குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களால் பெருக்கம்X 100க்கு வீதம் கணக்கிடல்

உ-ம் பிறிற்றோ குறியீடு =

25/75X25/300X100=8.1% மேலும்

பிறிற்றோ குறியீடு 20% குறைவாக இருக்கும் போது ஒரு டெங்கு நோயாளி அப்பிரதேசத்திற்கு வந்தால் சுகாதாரத்திணைக்களமும், மக்களும் எச்சரிக்கையுடனான அறிகுறியாக எடுத்து மேலும் நுளம்பின் அடர்த்தியை 5% க்கும் கீழே குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் மிக மிக அவசியமானது என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும்.

முடிவுரை

இந்த நூலில் மிகவும் சுருக்கமாகவும் இயன்றளவிலான விளக்கங்கள் படங்களுடனும் தரப்பட்டிருப்பது இந்நூலினைப் படிப்பவர்களின் விஞ்ஞான வைத்திய அறிவைப் பெருக்குவதற்கும் சாதாரண பொதுமக்களுக்கு வன்னியில் கடந்த யுத்தகாலத்தில் மலேரியா, டெங்கு எனும் இரு பாரிய நுளம்புத் தொற்று நோய்களிலிருந்து எப்படி வன்னி மக்கள் காப்பாற்றப்பட்டனர் என்றும் இனிவரும் காலங்களிலும் வன்னி வாழ் மக்கள் இந்நூலில் தரப்பட்டுள்ள அறிவு பூர்வமான, அனுபவபூர்வமான விஞ்ஞானபூர்வமான, வைத்திய பூர்வமான விடயங்களைச் சிரம்மேற்கொண்டு கடைப்பிடித்து ஒழுகுவதன் மூலமும் மற்றையோருக்கு இப்படியான விடயங்களைச் சொல்லிக் கொடுத்து "கற்றல் கற்பித்தல்" எனும் செயல் வழிக்கு அமைவாக வன்னிக்கு வெளியில் வதியும் மக்களுக்கும் பயன்பெறச்செய்ய வேண்டுமென்பதே எமது அவா. இந்நூலில் விபரிக்கப்பட்ட விடயங்கள் சாதாரண மக்களிடையேயும் சென்றடையும் என்பதில் ஏ்மக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை. அதே நேரம் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள், சுகாதார சேவைகளுடன் தொடர்புபட்ட உள்நாட்டு, வெளிநாட்டு சர்வதேச நிறுவனங்கட்கும் கூட இது ஒரு வழிகாட்டி நூலாகவும் உசாவு துணை நூலாகவும் பயன்பட வேண்டும் என்பதே எமது வேணவா.

உயிரியல் தடைமுறையில் கச்சப் பொட்டியான் மீன்கள் வன்னிக் கிணறுகளில் விட்டதன் மூன்று மாதங்களின் பின்பு காவியான அனோபிலஸ் கியூலிசிபேசிஸ் நுளம்பின் குடம்பிகளின் அடர்த்தி குறைந்தமையும் மூளை மலேரியா நோயாளிகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளமையும், இவ்வாய்வின் மூலம் உறுதிப்படுத் தப்பட்டுள்ளது.

மலேரியா காய்ச்சலால் இறந்தோர் வன்னிப்பிராந்தியத்தில் (கிளிநொச்சி, முல்லைத்தீவு) கச்சப் பொட்டியான் மீன் விட முன்பு 1997-1998வரை.

| ஆண்டு | சாவடைந்தோர்தொகை |
|---|---|
| 1997 | 346 |
| 1998 | 232 |

கச்சப்பொட்டியான் மீன் விட்ட பின்பு1999-2003 செப்ரெம்பர் வரை

| ஆண்டு | சாவடைந்தோர்தொகை |
|---|---|
| 1999 | 63 |
| 2000 | 40 |
| 2001 | 36 |
| 2002 | 19 |
| 2003செப்-முடிவு | 0 |


இவ்வுயிரியல் கட்டுப்பாட்டு முறையின் பின்பு மலேரியா மற்றைய ஆண்டுகளைவிட 1999 ஆம் ஆண்டிலிருந்து குறைந்துள்ளமை கண்கூடு.

Dr ம.இராசதுரை.
இம்பர் சிட்டி,
பருத்தித்துறை.

நுளம்புக்குடம்பிகளை உண்ணும்
கச்சப்பொட்டியான்
குளங்களில் ஆறுகளில்
கும்மாளம் போடுவோம்
வளங்கள்பல இருந்தும் மலேரியா
குடம்பிகளை
அழிக்க முடியாதிருக்கையில்
இடம்தேடி எம்மிடம்வந்தனர்
பூச்சியியல் குழுவினர்
அடம்பிடியாது யாமும்
ஒத்துழைத்தோம்
பூச்சியியலாளர் முன்னெடுத்த
மலேரியா தடை
பூச்சியை அழிக்க யாமும்
திடசங்கற்பம்.
தற்போது கிணறுகளில்
எம்மாட்சி
அற்ப மலேரியா நுளம்புக்கும்
குடம்பிக்கும் தாம் வீழ்ச்சி.
மீண்டும் மீண்டும் யாம்வருவோம்
ஏனைய நுளம்பு இனத்தையும்
அழிப்போம்
யான் கச்சப்பொட்டியான்.

(முற்றும்)

# மரணம்-அப்புறம்?



## ஆன்மீகம் 01

"கேள்வியாளர்: மிகவும் மோசமான நிலையில், இரண்டுமாத காலங்கள் மருத்துவமனையில் கழித்த பின்பு என் தந்தை இறந்து விட்டார். என்தந்தை கடைசி மூச்சை விடும்போது, நாங்கள் அனைவரும் அவரைச் சுற்றி இருந்தோம். அப் போது எனக்குள் ஒரு கேள்வி எழுந்தது. அதாவது நம் உடலுக்குள் இருந்து நம்மை இழுத்துச் செல்லக்கூடிய உந்து சக்தி எது?"

சத்குரு:- நாம் "உடல்" என்று சொல்வது, பூமியிலிருந்து எடுத்த சிறுபகுதியைத்தான். அது தற்போது இப்படித் துள்ளி ஓடிக்கொண்டு இருக்கிறது. அது வெறும் மண்ணாலானது. இது உங்களுக்குக் கடனாகக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்தக் கடனைத்திருப்பிக் கொடுக்கிற காலம் வருகிறபோது, தேவையில்லாமல் பரபரப்படைய வேண்டியதில்லை. வாங்கிய கடனை திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று உங்களுக்குத் தெரியும். அப்படிக்கொடுக்காவிட்டால் வேறுயாராவது அந்தக்கணக்கை வைத்திருப்பபார்கள். எனவே நீங்கள் புமியிலிருந்து ஒரு அணுவைக்கூட எடுக்கமுடியாது. நீங்கள் அதைக்கடன் வாங்கலாம்; உபயோகப்படுத்தலாம்; அனுபவிக்கலாம்; ஆனால் அதைத் திருப்பிக் கொடுத்தாக வேண்டும். இதுதான் வாழ்க்கை முறை. தற்போது தந்தை,மனைவி, குழந்தை என்று அழைக்கப்படக்கூடிய பூமியின் சிறு பகுதிகளோடு நீங்கள் ஒட்டிக் கொண்டு விட்டீர்கள் உங்கள் அன்பு, "நீங்கள்" என்று எதை நினைக் கிறீர்களோ அதனிடமும் உங்களைச் சார்ந்தவர்களிடமும் தான் உள்ளது.

ஒவ்வொரு நாளும் இவ்வுலகில் மனிதர்கள் இறக்கிறார்கள். ஒவ்வொருநாளும் எத்தனைபேர் இறக்கிறார்கள் என்கிற கணக்கு எனக்குத் தெரியவில்லை. ஒவ்வொரு நிமிடமும் மனிதர்கள் இறக்கிறார்கள். இவர்கள் இறப்பது எதனால் என்று நீங்கள் ஏன் ஒரு முறை கூட நினைத்துப் பார்க்கவில்லை. நீங்கள் ஏன் ஒரு முறை கூட இந்த வாழ்க்கையின் மூலத்தை தேடவில்லை. தற்சமயம் உங்கள் தந்தை இறந்து விட்டார். "என் தந்தை" என்கிற உணர்வினால், இறப்பு உங்களை முழுவதுமாக ஆக்கிரமித்துள்ளது. அடுத்தமனிதன் இறக்கிறான் என்பதில் உங்களுக்கு அக்கறை இல்லை. உங்கள் அக்கறை, அடுத்த உயிரைப் பற்றியதல்ல உங்களைச்சார்ந்தது மட்டுமே உள்ளது. உங்கள் அக்கறை முறையில்லாமல் இருந்தால், நீங்கள் வாழ்க்கையைப்பார்க்கும் விதமும் முறையில்லாமல்தான் இருக்கும். வாழ்க்கையைப் பற்றிய முறையற்ற கண்ணோட்டம் உங்களிடமிருந்தால் துன்பத்தைத் தவர்க்கமுடியாது. தற்சமயம் உங்கள் தந்தை இறந்து விட்டார். நாம் நேசித்தவர்கள், அதிக காலம் நம்முடன் இருப்தற்கு தேவையான விடயங்கள் எல்லா்வற்றையும் செய்ய விரும்புகிறோம். எப்படியென்றாலும் அவர்கள் நம்மைப்பிரிந்து சென்று விடுவார்கள்.

இப்போது ஒரு கதை கூறுகிறேன். ஒருவர் புதிய வீட்டைக் கட்டினார் நம் கலாசாரத்தில் புதிய வீடுகட்டினால் ஒரு புனிதரையோ, சாதுவையோ அழைத்து வீட்டினை ஆசீர்வதிக்கச் செய்வார்கள். எனவே அவர் ஒரு யோகியை அழைத்து வந்து, அரசைப் போல் வரவேற்று, உபசரித்து, விருந்து படைத்தார். பின்பு அவர் குடும்பத்தினரையும், அவர்விட்டையும் ஆசீர்வதிக்கும்படி கேட்டார். அதற்கு அந்த யோகி"முதலில் உங்கள் தந்தை இறக்கட்டும். அதன்பின்பு நீங்களும் அதன் பின்பு உங்கள் குழந்தைகளும் இறக்கட்டும்" என்று கூறினார். அதைக் கேட்ட அந்த மனிதனுக்கு உண்மையாகவே கோபம் வந்தது. "முட்டாளே நாங்கள் உன்னை வீட்டிற்கு அழைத்து வந்து அரசரைப்போல உபசரித்து, விருந்தளித்து,பரிசுகள் கொடுத்து எங்களை ஆசீர்வதிக்குமாறு கேட்டால், என் தந்தைமுதலிலும் பின்பு நானும் என்குழந்தைகளும் இறக்க வேண்டும் என்று கூறுகிறாயே" என்று கடிந்து கூறினார். மேலும் யோகி இப்படிக்கூறியதால், அப்படி நிகழ்ந்து விடுமோ என்றுபயங் கொண்டார்.

அதற்கு அந்த யோகி, "நான் கூறியதில் தவறு இல்லை. முதலில் உங்கள் தந்தையும், பின்பு நீங்களும் அதன் பின்பு உங்கள் குழந்தைகளும் இறப்பதுதான் நல்லது. நீங்கள் உங்கள் தந்தைக்கு முன் இறந்தாலோ அல்லது உங்கள் குழந்தைகள் உங்களுக்கு முன் இறந்தாலோ நல்லதல்ல எனவே முதலில் உங்கள் தந்தையும் பின்பு நீங்களும் அதன் பின்பு உங்கள் குழந்தைகளும் இறக்கவேண்டும். இதுதான் இயற்கை. இப்படித்தான் வாழ்க்கை நடக்க வேண்டும். நாம் நேசிப்பவர்கள் நம்முடன் இருப்பதற்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவு முயற்சியும் செய்கிறோம். ஆனால் அவர்கள் பிரிந்து செல்கிற நேரம் வரும்போது, அவர்களை நல்ல முறையில்வழியனுப்பி வைக்கவேண்டும் நீங்கள் செல்ல வேண்டிய நேரம் வரும் போதும் நல்ல முறையில் செல்ல வேண்டும். இந்த உடல் உங்களுக்கு சொந்தமானதல்ல. வட்டியில்லாமல் வாங்கிய கடன் ஒவ்வொரு அணுவையும் நீங்கள் திருப்பிக் கொடுத்தாக வேண்டும்.

**சத்குரு ஜக்கி வாசு தேவ்**

# சிறுவருக்கு மகிழ்வூட்டும் கலை

## "பாப்பா பாரதி" அனுபவங்கள் 03

**சிறுவருக்காக ஆக்குதல்**

குழந்தைகளுக்காக ஒரு வீடியோவைத் தயாரிப்பதில் உள்ள சவால்களும் சிரமங்களும் பெரியன. மிக அடிப்படையான தேவையாகவும் அதேவேளையில் தட்டுப்பாடாகவும் உள்ள பொருள் வீடியோவுக்கான பிரதியாகும். பொருத்தமானதும் பலமானதுமான ஒரு பிரதியின்றி இத்துறையில் இறங்குவது தற்கொலைக்கு ஒப்பானதாகும்.

குழந்தைகளுக்காகப் படைப்புக்களை உருவாக்கும் எவரும் கிரகிக்க வேண்டிய, ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டிய சில அடிப்படை உண்மைகள் உள்ளன. குழந்தைகளின் மனங்களையும் உணர்வுகளையும் புரிந்து கொள்ளுதலும் குழந்தைகளின் உலகினுள் பிரவேசித்து அவர்களின் மட்டத்திற்கு இறங்கி சிந்தித்தலும் கற்பனை செய்தலும் முக்கியமானவை. இது சொல்வதற்கு இலகுவாயினும் செய்வதற்கு பலரும் சிரமப்படுகின்ற ஒரு விடயமாகும். குழந்தைகளின் சிந்தனையாற்றலையும் புதியவற்றை அறிய விரும்பும் ஆவலையும் நாம் புரிதல் வேண்டும். படைப்பின் உட்பொருளும் சம்பவக் கோர்வையும் வயதுக்குப் பொருத்தமானதாக அமைய வேண்டும். தமது சொந்த உலகோடும் அனுபவங்களோடும் அடையாளம் காண்பதையும் கற்பனைச் சிறகுகளை விரித்துப் பறப்பதையும் குழந்தைகள் விரும்புகின்றார்கள். இந்த அனுபவங்களையும் இரசனையையும் அவர்களுக்கு பரிமாற வேண்டுமாயின் பொருத்தமான மொழிப் பயன்பாடு அத்தியாவசியம். வார்த்தைகளும் வாக்கியங்களும் வயதுக்கேற்ப அமையும். அதேவேளை புதிய வார்த்தைகளை கற்றுக் கொள்ளும் வாய்ப்பையும் அவர்களுக்கு வழங்க முடியும். உரையாடல்களுக்கு கூர்மையும் சிக்கனமும் அழகூட்டும். அழகிய காட்சிகளையும் வர்ணங்களையும் ஆடல் பாடல்களையும் பாத்திரங்களின் உற்சாகம், உயிர்துடிப்பு ஆகியவற்றையும் குழந்தைகள் இரசிக்கின்றனர். நவீன தொழில் நுட்பத்தின் பயன்பாடு படைப்புக்களுக்கு மேலும் வளம் ஊட்டும்.

ஆங்கிலம் முதலான பிற மொழிகளில் பெருமளவு செலவில் பிராமாண்டமான திரைப் பட, வீடியோ தயாரிப்புக்களை மேற்கொள்கின்றனர். இவை குழந்தைகளை வசீகரிக்கின்றன என்பதில் ஐயம் இல்லை. அதே வேளையில் சிக்கனமாகவும் எளிமையாகவும் தயாரிக்கப்பட்ட பல படைப்புக்களும்

> **"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

குழந்தைகள் மத்தியில் பெரு வெற்றி பெற்றுள்ளன. எனவே தமிழ்ச்சினிமா போன்று பெரும் பணத்தைக் கொட்ட வேண்டிய அவசியம் குழந்தைகளுக்கான தயாரிப்புக்களுக்கு இல்லை. அதேவேளை "பச்சைத் தண்ணீரில் பலகாரம் சுட முடியாது" என்பதையும் நாம் அறிவோம்.

**"பாப்பா பாரதி" அனுபவங்கள்**

ஒரு வீடியோ படைப்பை முறையாகத் தயாரித்தல், அதுவும் தொழில் ரீதியாக அன்றி ஆர்வத்தினாலும் பொழுது போக்காகவும் பல வேலைகளுக்கும் மத்தியில் தயாரித்தல் இலகுவான செயல் அல்ல. 1995 இல் பாப்பா பாரதியை தயாரித்த அனுபவம் இதை எங்களுக்குத் தெளிவாக்கியது. பாரதி பள்ளி என்னும் தமிழ்ப்பாடசாலையின் பாதிப்பினாலும் சுற்றியுள்ளள குழந்தைகளின் தேவை கருதியும் தொடக்கப்பட்ட இந்த முயற்சி ஏராளமான பெற்றோரும் கலைஞர்களும் கை கொடுத்து உதவியிராவிடில் நிறைவேறி இருக்கது இது ஒரு சமூக முயற்சியாகவே சித்தித்தது. அந்தக்காலத்துத் தொழில்நுட்பத்துக்கு ஏற்ப ஜெனரேற்றர்கள் சகிதம் பாரமான உபகரணங்களுடன் காட்சிகளுக்கான பொருட்களையும் ஆடை, அணிகள், மூட்டை முடிச்சுகளையும் சுமந்து வெளிப்புறக் காட்சிக்காக ஆறுகள், மலைகள், பூங்காக்கள், கடற்கரை என நடந்து அலைந்து பட மெடுத்த அனுபவங்கள் களைப்பானவையாயினும் மகிழ்ச்சியானவையே பெரு வாரி யான பெற்றோரும் சிறுவர் சிறுமியரும் ஒன்று சேர்ந்து உணவுப் பொருட்களையும் சமைத் துக்கொண்டு படப்பிடிப்புகளை உல்லாசப் பயணமாக்கினர். கழுதை, புகை வண்டி, ஆமை, நண்டு என உயிரூட்டமுள்ள பொருட்களை உருவாக்குவதில் கை வண்ணம் மிக்க பெற்றோர் உதவினர். வாடகைக்கு எடுத்த விலையான உபகரணங்களை நிதி நெருக் கடி காரணமாக மிக விரைவிலேயே திருப்பிக் கொடுக்க வேண்டி இருந்தது. இதனால் படத் தொகுப்பில் ஈடுபட்ட கலை ரஞர்கள் நித்திரையின்றி 24 மணி நேரம் வேலை செய்தனர். இதே காரணத்தால் படப் டிப்புகள் கூட நள்ளிரவில் முடிந்து அதிகாலை யில் தொடங்கின. இவ்வாறான ஒரு சூழலில் மலர்ந்ததே பாப்பா பாரதி.

இந்த ஆரம்ப முயற்சிமூலம் நாங்கள் கற்றுக்கொண்டது ஏராளம். பெற்றக் கொண்டது பெறுமதி மிக்க அனுபவம்.

அடுத்து வரும் 15 வருடங்களிலும் வீடியோ தயாரிப்பதை மீண்டும் தொடர்வது பற்றிய கேள்வி பல சந்தர்ப்பங்களில் எழுந்த போதிலும் பல்வேறு காரணங்களால் இது நடக்கவில்லை. நான்காவது பாகத்தை வெளியிடுவதற்கான செயற்பாடுகள் இப் பொழுது ஆரம்பமாகியுள்ளன. இந்த முயற்சி கைகூடும்பொழுது முன்னேறிய தொழில் நுட்ப வசதிகளும் பழைய அனுபவங் களும் குழந்தைகளிடமிருந்து நாம் கற்றக் கொண்ட பாடங்களும் மேலும் ஒரு படி திருத்தமானதும் கவர்ச்சியானமான ஒரு ஆக்கத்தை வெளிக்கொணர உதவும். வரண்ட தமிழ் வீடியோபரப்பில் மேலும் ஒரு துளிநீராக இதுவிழும்.

இந்த நிலப்பரப்புக்கு ஒரு துளியல்ல பெருமழை தேவை. தமிழில் குழந்தைகளுக்கான வீடியோவோ திரைப்படமோ தொழில்ரீதியாக உருவாகி வளர முடியுமாயின் அதுவே சிறந்தது. இது எப்பொழுது நடக்கும். எழுத்து நடிப்பு தயாரிப்பு மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த திறமைகள் யாவும் ஒன்று சேர வேண்டும். தயாரிப்புக்களை உலகெங்கும் சந்தைப்படுத்தக்கூடிய வாய்ப்பும் வசதியும் வேண்டும்.

முடிவாக தமிழ்க் குழந்தைகளை மகிழ்விக்கக்கூடியதான காட்சி ஊடகத்தின் வளர்ச்சி தமிழர் புலம்பெயர்ந்த சூழலில் மட்டுமல்ல தாயகச்சூழலிலும் மிக அவசியமான ஒன்றாக உள்ளது. இத்தேவையை நிறைவு செய்வது எப்படி என்பதைப்பற்றி எமது சமூகம் சிந்தித்தல் அவசியம்.

**மாவை நித்தியானந்தன் -அவுஸ்திரேலியா**

(முற்றும்)

# இன்சுலின் சிகிச்சை முறைகள்

### இன்சுலின் ஊசி போடும் இடங்கள்

இன்சுலின் ஊசியை உடலின் எந்தப் பகுதியில் போட்டுக் கொள்வது என்பதை நீங்கள் தான் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

கொழுப்பு அடங்கிய ஒரு பகுதியில் ஊசி போட்டுக் கொள்ளும் பட்சத்தில் தொடையை விட அடி வயிற்றில் ஊசி போட்டுக் கொள்வது எளிதாக இருக்கும்.

### கவனிக்க வேண்டியவை

✷ இன்சுலின் ஊசியைப் போட்டுக் கொள்ளும் முன்பு சில அடிப்படை விடயங்களை அறிந்து வைத்திருப்பது நல்லது.

✷ உடலில் சுமார் கால்பாக அளவு பகுதியை ஊசி போடும் இடங்களாப் பிரிக்க வேண்டும். ஒவ்வொரு புதிய ஊசி குத்துவதையும் கடந்த முறை ஊசி போட்ட இடத்திலிருந்து குறைந்தது ஒரு விரல் அகலத்திற்கு அப்பால் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

✷ கையில் ஊசி போடும் போது மேற்புறக் கையின் வெளிப்புற பின்புற இடத்தைப் பயன்படுத்தவும். இங்கே கொழுப்புத் திசுக்கள் உள்ளன. உடலில் எந்த இடத்திலும் தசைத்திசுவில் ஊசி போடாதீர்கள்.

✷ அடி வயிற்றில் கொழுப்புள்ள எங்கு வேண்டுமானாலும் ஊசி குத்தலாம்.

✷ தொப்புளைச் சுற்றி இரண்டு அங்குல இடத்தைத் தவிர இந்தப் பகுதியில் கெட்டியான திசுக்கள் உள்ளன. அவை சீரற்ற முறையில் இன்சுலினை கிரகிக்கக் காரணமாகிறது.

✷ உடலில் எந்த இடத்திலாவது மச்சங்களோ அல்லது தழும்புகளோ இருந்தால் அந்தப் பகுதியில் ஊசி குத்துவ்தை தவிர்க்க வேண்டும்.

✷ தொடையில் ஊசி போடும் போது மேல் வெளிப்புறத் தொடைப்பகுதியில் ஊசி போட வேண்டும்.

✷ காய்ச்சல் போன்ற வேளைகளில் உடல் உஷ்ணமாக் இருப்பது, உணவுக்கட்டுப்பாடு, உடற்பயிற்சி மற்றும் மன உளைச்சல் ஆகியவை இன்சுலின் உடலில் வேலை செய்யும் விதத்தைப் பாதிக்கும்.

✷ இன்சுலின் மற்றும் திட்டமிடாத உடற்பயிற்சி மிகவும் குறைந்த இரத்த நீரிழிவுக்கு வழி வகுக்கலாம்.

✷ உடற்பயிற்சியும் இன்சுலினும் இரத்தத்தில் குளுக்கோஸ் அளவைக் குறைப்பதால் உடற்பயிற்சி செய்யும் முன்பு போதுமான அளவு சாப்பிட வேண்டுமா அல்லது இன்சுலினை குறைவாக எடுத்துக் கொள்ள வேண்டுமா என்பதை தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

✷ ஒரு நாளைக்கு எவ்வளவு இன்சுலின் தேவை என்பதை மொத்தத் தேவையில் மூன்றில் இரண்டு பங்கை காலையிலும் மீதமுள்ளதை மாலையிலும் போட்டுக் கொள்ள வேண்டும்.

✷ இன்சுலின் ஊசி போட்ட பின்னர் ஒத்தடம் கொடுக்க வேண்டாம்.வெந்நீர் ஒத்தடத்தால் இன்சுலின் விரைவாக உறிஞ்சப்படவும் குளிர்ந்த நீர் ஒத்தடத்தால் மிக மெதுவாகவும் இன்சுலின் ஏற்பு இருக்கும்.

### ஒரு இடத்தில் ஊசி போடுவதால் வரும் பிரச்சினைகள்

✷ சருமத்தில் குழிகள் தோன்றலாம்.

✷ கட்டிகள் அல்லது கொழுப்புக் கட்டிகள் தோன்றலாம்.


✷ சருமத்தில் தடுமன்கள் தோன்றலாம்.

✷ மேற்கண்ட ஏதேனும் ஏற்பட்டால் மேலும் அந்த இடத்தில் ஊசி குத்திக் கொண்டிருந்தால் இன்சுலின் வேலை செய்வது தாமதமாகும் என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.

✷ புட்டத்தில் இன்சுலின் ஊசியைப் போட்டுக் கொண்டால் தாமதமாக அது வேலை செய்யும்.

✷ தொடையில் போட்டுக் கொண்டால் அதை விட சிறிது வேகமாக வேலை செய்யும்.

✷ இதை விட வேகமாக இன்சுலின் வேலை செய்ய வயிற்றின் அடிப்பாகத்திலும் மிக வேகமாக வேலை செய்ய கைகளிலும் இன்சுலின் போடலாம்.




இன்சுலினைப் போட்டுக் கொள்ள வேண்டிய பகுதிகள்




**03**



### இன்சுலினால் வரும் சிக்கல்கள்

இன்சுலின் ஊசியைப் போட்டுக் கொள்ளும் முன்பு உடலில் இருக்கும் இன்சுலின் அளவை சரியாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

உணவில் நேர மாறுதல் இருந்தாலும் சாப்பிடும் அளவு மாறுபட்டிருந்தாலும் கர்ப்பம் மற்றும் மது அருந்திய சமயங்க்ளிலும் சிறுநீரகம் சரியாக செயற்படாவிட்டாலும் இன்சுலினை எடுத்துக் கொள்ளும் வேளையை சரியாகத் தீர்மானிக்க வேண்டும்.

**பேராசிரியர்**
**டாக்டர் டி.காமராஜ்,**
M.D.,P.G.D.C.G.,D.M.R.,
**சென்னை.**

இல்லா விட்டால் இரத்தத்தில் சீனி அளவு குறைந்து விடுதல், இன்சுலின் ஒவ்வாமை, உடல் வீக்கம், இன்சுலின் எதிர்வினை போன்ற பிரச்சினைகள் தோன்றும்.


அடிக்கடி விரதம் இருக்கும் நீரிழிவு நோயாளிகள், மது அருந்துவோர், கர்ப்பிணிகள், உணவு விடயத்தில் கவனம் செலுத்தாதோர் ஆகியோர் இன்சுலினை போட்டதும் இரத்த சீனி அளவு குறைய வாய்ப்பு உண்டு.

இன்சுலின் போட்டுக் கொள்ளும் இடத்தில் வலி, நிறம் மாறுதல், வீக்கம் போன்றவை ஏற்படும். இவ்வாறு இருந்தால் இன்சுலின் ஒவ்வாமை ஏற்பட்டிருப்பதை அறியலாம்.

சரியான அளவு இன்சுலினை ஏற்றிக் கொள்ளாவிட்டால் பல சிக்கல்கள் வரும். அவற்றில் முக்கியமானவை இரத்த சீனி அளவு குறைதல்.இதனால் உடல் வியர்த்தல், உடல் முழுவதும் சில்லுடுதல், கை கால்கள் மரத்தப் போதல், கை கால்கள் குத்தல் உணர்வுகள்,தலை சுற்றல், பலவீனமாக இருப்பது போன்ற உணர்வு, இதயப் படபடப்பு, தலைவலி, பார்வை மங்குதல் போன்றவை.

(தொடரும்)


# நகத்தில் நோய் அறியலாம்



நகத்தில் தோன்றும் நோய்கள் என்னென்ன?

பூஞ்சைக் காளான் தொற்று- இரண்டு வகைப்படும். நகத்தைச் சுற்றியுள்ள தோல் மடிப்பு பாதிக்கக்கூடிய Candida எனப்படும் பூஞ்சைகாளான் தொற்று முதலாவதாகும். இது மிக அதிகமான தண்ணீரில் வேலை பார்க்கும் இல்லத்தரசி, ஹோட்டல் தொழிலாளர்கள் மற்றும் நீரிழிவு நோயாளர்களுக்கு வரும்.

இதனை Chronic Candidal Parony Chia என்போம். இதற்கு இன்னொரு பெயர் தான் நகச்சுற்று.




அடுத்தது நகத்தின் மேலேயே வரும் பூஞ்சைக் காளான் ஆகும். இது நகம் அடிபடும் போது வரும்.

நகத்தில் வரும் சோரியாஸிஸ் இரண்டாவது நகப் பாதிப்பாகும். சோரியாஸிஸ் நோயாளிகள் 25% பேர்களுக்கு நகத்திலும் சோரியாஸிஸ் பாதிப்பு வரும். இவர்களுக்கு Nailpitting என்கிற சிறுசிறு குழிகள் ஏற்படும். நகத்தின் தடிமனும் அதிகமாகிவிடும். நகத்தின் அடியில் எண்ணெய் படர்ந்தது போல தெரியும்.


### நகத்தோல் நோய்

Lichen planus எனும் தோல் நோயின் போதும் நகம் பாதிக்கப்படலாம். இதில் எல்லா நகங்களும் பல வேறாக பாதிக்கப்படும். இதற்கு Twenty Nail Dystrophy என்று பெயர்.

Aolpecia Areata என்கிற தலை வழுக்கை காரணமாக ஏற்படும் நகபாதிப்பு

இவை மட்டுமல்லாமல் பல் வேறு வியாதிகளுக்காக நாம் சாப்பிடும் மருந்துகள் பல பக்க விளைவுகளை நகங்களில் ஏற்படுத்தலாம்.

மருந்து ஒவ்வாமையை நகங்




களை ஆய்வு செய்வதன் மூலம் கண்டு பிடித்து விடலாம்.

### நகத்திலும் புற்றுநோய் வருமா?

வரும். நகங்களில் Sub unGual melanoma எனப்படுகின்ற மிகக் கொடூர புற்று நோய் வரலாம்.இப்புற்றுநோய் வந்தவர்கள் குறித்த காலத்தில் சிகிச்சை செய்யாவிட்டால் அதிகபட்சம் 2 மாதம் தான் உயிரோடு இருப்பார்கள்.இப்புற்றுநோயை ஆரம்பத்தில் நகம் கருமையாக இருப்பதை வைத்து கண்டறிந்து குணப்படுத்தி விடலாம்.முற்றிய நிலையில் ஏதும் செய்ய முடியாது.

### நகத்தை-அழகு நிலையங்களில் சுத்தம் செய்வது நல்லதா?

manicure, pedicure என்கிற முறையில் நகத்தை அழகு நிலையங்களுக்குச் சென்று பலர் சுத்தம் பண்ணிக் கொள்வது மிகத் தவறான பழக்கமாகும்.இது நல்லதல்ல. நகத்தை சாதாரண சவர்க்காரமும் நீரும் கொண்டு சுத்தப்படுத்துவதே நல்லது. போதுமானதும் கூட. அழகு நிலையங்களில் நகத்தை சுத்தப்படுத்தும் போது நகத்தின் முக்கிய பகுதிகளான culticle, Nail fold போன்றவை வெகுவாகப் பாதிக்கப்படும். அகற்றப்படும் பலவிதமான கிருமிகள், பூஞ்சைக் காளான் போன்றவை எளிதில் நகத்துக்குள் சென்று பாதிப்பை ஏற்படுத்த ஏதுவாகிவிடும்.

**02**

**தோல் சிகிச்சை நிபுணர்**
**டாக்டர் எஸ்.முருகுசுந்தரம்**
MBBS, DD, சென்னை-10

### நகப்பூச்சு போடுவது நல்லதா?

நகப்பூச்சு போடவே கூடாது. நகப்பூச்சு போடுவது, நகப்பூச்சை அகற்றும் திரவம் இரண்டுமே நகத்தையும் அதனைச் சுற்றியுள்ள தோலிலும் ஒவ்வாமையை ஏற்படுத்துவதுடன் நாளடைவில் நகத்தின் நிறம் மாறவும் காரணமாகிவிடும். ஒரு முறை நகத்தின் நிறம் மாறினால் அதை சரி செய்வது கடினம்.

(தொடரும்)

# ஆடி மாத இராசி பலன்கள்




(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்)

தெய்வ வழிபாடுகளால் திருப்தி அடையலாம்!

*வசீகரமான பேச்சால் வருபவர்களை எல்லாம் வசமாக்கிக் கொள்ளும் மிதுன இராசி நேயர்களே!*

புதனின் ஆதிக்கத்தில் பிறந்த நீங்கள் எதை எங்கு பேசினால் எடுபடமோ அதை அங்கு பேசி காரியத்தை சாதித்து விடுவீர்கள். புதுமையை விரும்பும் நீங்கள் பழமைக்கும் முக்கியத்துவம் கொடுப்பீர்கள். பிறரால் செய்ய முடியாத செயலை தான் செய்து காட்ட வேண்டுமென்ற எண்ணம் உங்கள் மனதின் அடித்தளத்தில் இருக்கும். புகழ் மிக்கவர்களுக்கு பின்னணியாக இருப்பவர்களும் நீங்கள் தான்.

உங்களுக்கு இந்த ஆடி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது இராசிநாதன் புதன் தன ஸ்தானத்தில் சகாய ஸ்தானாதிபதி சூரியனுடன் இணைந்து சஞ்சரிப்பதாலும் தன ஸ்தானத்தை தனாதிபதி சந்திரனே பார்த்து மாதம் தொடங்குவதாலும் நல்ல பலன்களை அதிகமாக அள்ளித் தரப் போகிறது. பொருளாதார வசதி பெருகும்.புதிய பொறுப்புகளும் பதவிகளும் வந்து சேரலாம்.

விரய ஸ்தானத்தில் செவ்வாய் கேதுவுடன் இணைந்திருக்கிறார். எனவே, சொத்துக்கள் விற்பனையும் அதனால் தன இலாபமும் கிடைக்கலாம். குருவின் பார்வை பலத்தால் 3,5,7 ஆகிய இடங்கள் புனிதமடைவதால் சகோதர ஒற்றுமையும் தக்க தருணத்தில் அவர்கள் கைகொடுத்து உதவும் சூழ்நிலையும் உருவாகும். என்றாலும் அர்த்தாஷ்டம சனியின் ஆதிக்கம் இருப்பதால் அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

மாதத் தொடக்கத்திலேயே உங்கள் இராசியில் சுக்ரன் சஞ்சரிப்பதால் பயணவாய்ப்புகள் அதிகரிக்கும். ஒரு சிலர் நீண்ட தூர பயணங்களை மேற்கொள்ளலாம்.

அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கத்திலிருந்த விடுபட சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயர் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. குறிப்பிட்ட எண்ணிக்கையில் ராம ஜெயம் எழுதுவதும் ஆஞ்சநேயருக்கு வடை மாலை அணிவித்து யோக பலம் பெற்ற நாளில் வழிபாடு செய்வதன் மூலம் தேக நலன்கள் சீராகும்.

மிதுன இராசியில் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். 6,11 க்கு அதிபதியாக செவ்வாய் விளங்கினாலும் உங்கள் இராசிலேயே செவ்வாய் இணைவதால் கொஞ்சம் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்ட வேண்டிய நேரமிது.

திடீர் விரயங்கள் ஏற்படலாம். உத்தியோக மாற்றம், இடமாற்றம், இலாகா மாற்றம் எதிர்பாராத விதத்தில் உருவாகலாம். சுய ஜாதகத்தில் தெசா புத்தி பலம் பார்த்து அதை ஏற்றுக் கொள்வது நல்லது.

எதிர்வரும் 24 ஆம் திகதி கடக இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். விரயாதிபதி தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் போது இந்த நேரத்தில் விரயத்திற்கேற்ற தனம் வந்து கொண்டேயிருக்கும். எனவே நாளை செலவு ஏற்பட போகிறது என்றால் முதல் நாளே வரவு வந்து விடும். சுப காரியப் பேச்சுக்கள் முடிவடையும். பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளிலும் வெள்ளி கிடைக்கும்.

இம்மாதம் இராசி நாதன் புதன் சந்திரன் வீட்டில் சஞ்சரித்து மாதம் தொடங்குவதால் தெற்கு நோக்கிய அம்பிகையை வழிபட்டு தேனான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்.

இம்மாதம் எண்ணங்கள் ஈடேறும் மாதமாகவே அமையப் போகிறது. பெண்களால் வந்த பிரச்சினைகள் தீரும் என்றாலும் புதிய பிரச்சினைகளும் உருவாகலாம். வாக்கு ஸ்தானத்தில் சூரியன் சஞ்சரிப்பதால் சொல்லும் வார்த்தை எல்லாம் சூடாகவே இருக்கும்.

எனவே கொஞ்சம் யோசித்து சொல்வது நல்லது. கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் சென்றால் விருப்பங்கள் நிறைவேறும். கட்டுக்கோப்புக்குள் குழந்தைகளை வைத்துக் கொள்வதும் நல்லது. இராகு வழிபாடு யோகம் சேர்க்கும்.




(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)

பொறுமையை கடைப்பிடித்தால் பெருமை!

*எதைச் செய்தாலும் அதில் ஒரு தனி முத்திரையை பதிக்கும் கடக இராசி நேயர்களே!*

சந்திரன் ஆதிக்கத்தில் பிறந்த நீங்கள் கற்பனை வானில் மிதப்பவர்களாக விளங்குவீர்கள்.24 மணி நேரமும் உங்கள் இதய சிம்மாசனத்தில் படம் ஓடிக் கொண்டே இருக்கும். தன்னம்பிக்கையை மட்டும் நீங்கள் குறைத்துக் கொள்ளாமல் இருந்தால் தலை சிறந்த தலைவர்களாக வர வாய்ப்பு உண்டு. பொது வாழ்வில் புன்முறுவலோடு ஈடுபடுவபர்கள் நீங்கள் தான்.

உங்களுக்கு இந்த ஆடி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது இராசிநாதன் சந்திரன் த்ன் வீட்டை தானே பார்ப்பதாலும் தனாதிபதி சூரியன் உங்கள் இராசியிலேயே உலா வருவதாலும் பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும் என்றாலும் கேதுவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் மனக்குழப்பம் அதிகரிக்கும். மதிப்பையும் மரியாதையையும் தக்க வைத்துக் கொள்ள பெரும் பிரயாசை எடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

சுக்ரன் பன்னிரெண்டாமிடத்தில் சஞ்சரிப்பதால் பெண் வழி பிரச்சினைகள் அகலும், தூர தேசத்தில் இருந்து அனுகூலச் செய்திகள் வந்து சேரும். பத்தாமிடத்தில் சஞ்சரிக்கும் குருவின் பலத்தால் பதவி மாற்றம், இடமாற்றம், ஊர் மாற்றம், இலாகா மாற்றம் போன்றவற்றை சந்திக்க நேரிடலாம்.

அங்கனம் வரும் மாற்றங்களை தெசா புத்தி பலம் பெற்றவர்கள் ஏற்றுக் கொண்டால் எந்தப் பாதிப்பும் ஏற்படாது.

இருப்பினும் முறையான மாற்றங்களும் முன்னேற்றங்களும் வந்து சேர குருவை வழிபட வேண்டியது அவசியமாகும். ஐந்தில் இராகு சஞ்சரிப்பதால் பிள்ளைகள் வழியில் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். சர்ப்ப ப்ரீதிகள் செய்வதன் மூலமும் துர்க்கை வழிபாடு செய்வதன் மூலமும் நற்பலன்களை வரவழைத்துக் கொள்ளலாம்.

எதிர்வரும் 24 ஆம் திகதி மிதுன இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக சகோதர வழியில் சில மாற்றங்கள் உருவாகும். கூட்டுத் தொழில் செய்வோர் தனித்து தொழில் செய்ய முன்வருவர்.வாங்கிய இடம் விற்கவில்லையே என்ற கவலை அகலும். புதிய இடம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். அந்நிய தேச வாய்ப்புகள் எண்ணியபடியே ஒரு சிலருக்கு கைகூடும். வாகன மாற்றம் செய்ய உகந்த நேரமிது.

எதிர்வரும் 24 ஆம் திகதி கடக இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக கொடுக்கல்-வாங்கல்களில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி எடுக்கும் முயற்சிகளை ஒரு முறைக்கு இரு முறை செய்யும் சூழ்நிலை உருவாகலாம். பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.கல்யாண வாய்ப்புகள் திடீரென கை கூடலாம்.

### சிவல்புரிசிங்காரம்

இம்மாதம் இராசிநாதன் சந்திரன் சனியின் வீட்டில் சஞ்சரித்து மாதம் தொடங்குவதால் சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

இம்மாதம் இனிய மாதமாக உங்களுக்கு அமைந்தாலும் உடல் ஆரோக்கியத்தில் உஷ்ணாதிக்க நோய்கள் உருவாகலாம். கொடுக்கல்-வாங்கல்களில் கொஞ்சம் விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது.

பக்கத்து வீட்டாரின் பகையை வளர்த்துக் கொள்ளமால் பார்த்துக் கொள்வது நல்லது.

கணவன்-மனைவி உறவு திருப்தி தரும் என்றாலும் மற்ற குடும்ப பெரியவர்க்ளின் மனக்குறைக்கு ஆளாக நேரிடும்.

விநாயகர் வழிபாடு மற்றும் சஷ்டி விரதத்தை கடைப்பிடிப்பது நல்லது. மார்த்தாண்ட வைரவர் வழிபாடும் உங்களுக்கு மகிழ்ச்சியை வரவழைத்துக் கொடுக்கும்.

(தொடரும்)

## கிழக்கில் பாலங்களை நிர்மாணிக்க ஜப்பான் அரசாங்கம் நிதியுதவி

கிழக்கு மாகாணத்தில் ஐந்து பாரிய பாலங்களின் நிர்மாண பணிகளுக்காக ஜப்பானிய அரசாங்கம் நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது.

ஜப்பானிய சர்வதேச கூட்டுறவு முகவரின் ஊடாக இந்த நிர்மாண பணிகளுக்காக 104 கோடி ரூபா நிதி ஜப்பானிய அரசாங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பேராதனையில் இருந்து பதுளை ஊடான செங்கலடி வீதி மற்றும் மட்டக்களப்பில் இருந்து திருக்கோண்டியாதி மடு ஊடான திருகோணமலை வீதியில் உள்ள நான்கு பாலங்களே இவ்வாறு புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

இந்தப் பணிகளுக்காக இலங்கை அரசாங்கம் 53 கோடி ரூபா நிதியுதவியினை ஒதுக்கீடு செய்ய முன்வந்துள்ளது. (ஸ்ரீ-2)

## பயங்கரவாத நிதிக் கொடுக்கல்-வாங்கல்களை கட்டுப்படுத்த புதிய சட்டங்கள் அறிமுகம்

பயங்கரவாத நிதிக் கொடுக்கல்-வாங்கல்களை கட்டுப்படுத்துவதற்கு புதிய சட்டங்கள் அறிமுகம் செய்யப்படவுள்ளன. சட்டவிரோத செயற்பாடுகள் மூலம் ஈட்டப்படும் கறுப்புப் பணத்தை சட்டரீதியான பணமாக மாற்றும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பயங்கரவாத நிதி தொடர்பான 2005 ஆம் ஆண்டு 25 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் நிதி கொடுக்கல்-வாங்கல் தொடர்பிலான 2006 ஆம் ஆண்டு 5 ஆம் இலக்க சட்டம் ஆகியன திருத்தப்படவுள்ளன.

விரைவில் இந்தச் சட்டத் திருத்தங்கள் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத நிதிக் கொடுக்கல்-வாங்கல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப் பிரிவொன்று செயற்பட்டு வருதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கறுப்புச் சந்தை பணப் பயன்பாட்டை கட்டுப்படுத்துவதற்கு தற்போது காணப்படும் ச்சட்டத்தில் சில குறைகள் காணப்படுவதாகவும் அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## வவுனியா சிறைக்கைதிகளின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும்

### புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வவுனியா சிறைச்சாலையில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் ஏ.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இவர்கள் மீதான விசாரணைகளை துரிதப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் விரைவாக எடுக்கும் படி நீதி அமைச்சு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றிற்கு தெரிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வவுனியா சிறைச்சாலையில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்ட தான் அவர்களின் விசாரணைகளை துரிதபடுத்துவதாக வாக்குறுதியளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் தான் நீதி அமைச்சு மற்றும் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளோடு பேச்சு மேற்கொண்டதாகவும் விரைவில் சாதகமான தீர்வு கிடைக்கும் என அவர் குறிப்பிட்டார்.

வவுனியா சிறைச்சாலையிலுள்ள நான்கு தமிழ் அரசியல் கைதிகள் கடந்த ஏழு நாட்களாக உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களுக்கு ஆதரவு தெரிவித்து வவுனியா சிறைச்சாலையிலுள்ள ஏனைய தமிழ் அரசியல் கைதிகளும் கடந்த சனிக்கிழமை முதல் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள 40 வயதான கட்டையன் லோகேஸ்வரன் என்பரின் உடல் நிலை மோசமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# சரத் பொன்சேகாவிற்கு 7 நாட்கள் தொடர் சிகிச்சை

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு ஏழு நாட்கள் தொடர்சிகிச்சை அளிக்கப்பட வேண்டுமென மருத்துவ நிபுணர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

தோள் பட்டையில் உபாதை ஏற்பட்டுள்ளதாகவும் இதற்கு ஏழு நாட்கள் தொடர்ச்சியாக சிகிச்சை அளிக்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளனர்.

மருத்துவர்கள் ஏழு நாட்கள் சிகிச்சை பெற்றுக் கொள்ளுமாறு ஆலோசனை வழங்கிய போதிலும் அதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவின் உடல் நிலை மோசமடைந்துள்ளதாகவும் இரண்டாவது தடவையாகவும் ஏழு நாட்கள் தொடர் சிகிச்சை அளிக்கப்பட வேண்டுமென மருத்துவர்கள் ஆலோசனை வழங்கியுள்ள்தாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையொன்றில் சிகிச்சை அளிக்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# கிழக்கில் ஆயுதங்களை விரைவாக ஒப்படைக்குமாறு இராணுவம் அறிவித்தல்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் செயற்படும் ஆயுதக்குழுக்கள் அவற்றிடமுள்ள ஆயுதங்களை விரைவாக ஒப்படைக்க வேண்டுமென கிராம மட்டத்தில் அறிவித்தல் விடுக்கவுள்ளதாக அப்பிரதேச இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

கிழக்கு மாகாணத்தில் கொள்ளை நடவடிக்கைகளில் பயன்படுத்துவதற்காக சிலகுழுக்கள்ஆயுதங்கள்வைத்திருப்பதாகவும் சில குழுக்கள் சில அரசியல் கட்சிகளுடன் தொடர்புபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில வாரங்களில் நாம் பல ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளோம். கிராம மட்டத்தில் பகிரங்க அறிவித்தல்களை விடுக்கவுள்ளோம். சட்டவிரோதமாக ஆயுதங்களை வைத்திருப்பவர்கள் குறித்து பெறுமதியான தகவல்களை தருபவர்களுக்கு நாம் அன்பளிப்புக்களையும் வழங்கவுள்ளோம் என மேற்படி வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பகுதியில் பயங்கரவாத குழுக்கள் இல்லை.ஆனால், சில குழுக்கள் கொள்ளைகளுக்கு பயன்படுத்துவதற்காக ஆயுதங்களை வைத்திருக்கின்றன என அவ்வட்டாரங்கள் கூறின.

அண்மையில் மட்டக்களப்பில் இடம்பெற்ற வங்கிக் கொள்ளை இதற்கு உதாரணமாகும். பல குழுக்கள் ரி-56 ரிவோல்வர்கள் போன்றவற்றைவைத்திருக்கின்றன. சிலவேளை அவர்கள் தமது அரசியல் நடவடிக்கைகளுக்கு ஆயுதங்களை பயன்படுத்துகின்றனர்.

அவர்கள் தாமாக ஆயுதங்களை ஒப்படைத்தால் தண்டிக்கப்படமாட்டார்கள். இல்லாவிட்டால் அவர்களுக்கு எதிராக இராணுவத்தினரால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (ஸ்ரீ-2)

# வடக்கின் சகல வாக்குச் சாவடிகளிலும் கண்காணிப்பாளர்கள் நிறுத்தப்படவுள்ளனர்

## பவ்ரல் அமைப்பு அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கின் சகல வாக்குச் சாவடிகளிலும் கண்காணிப்பாளர்கள் நிறுத்தப்படவுள்ளதாக பவ்ரல் அமைப்பு அறிவித்துள்ளது.

தேர்தல் நடைபெறும் ஏனைய பிரதேசங்களுக்கும் கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு கண்காணிப்பாளர்கள் விரைவில் அந்தப் பிரதேசத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக மேற்படி அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இவற்றுக்கு மேலதிகமாக வடக்கு மற்றும் ஏனைய பிரதேசங்களில் தேர்தல் நடைபெறும் தினம் நடமாடும் கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# பணம் சம்பாதிப்பதிலேயே அரசு அதிக நாட்டம்



## ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது ஆட்சியில் உள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் பணத்தை சம்பாதித்துக் கொள்வதில் கூடுதல் நாட்டம் காட்டுவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அக்குரணை பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தற்போது புதிய வகையிலான தேசப்பற்றாளர்கள் உருவாகியுள்ளதாகவும் அவர்களுக்கு தேசத்தின் மீதான பற்று இல்லையெனவும் பணத்தின் மீதே அதிக பற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தேசப்பற்றுக்காக உரக்கக் குரல் கொடுக்கும் பலர் மெய்யாகவே தேசத்தின் மீது பற்றுடையவர்கள் அல்ல எனவும் சுயநலவாத அரசியலில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அபிவிருத்தித் திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் பணத்தில் சிறிய தொகுதியை மக்கள் நலனுக்காக ஒதுக்கி ஏனைய பெரும் பகுதியை சொந்த தேவைக்காகப் பயன்படுத்தும் கலாசாரம் உருவாகியுள்ளது என அவர் கவலை வெளியிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# தமிழகத்தின் சில சக்திகளால் இலங்கை தமிழர்களுக்கு நெருக்கடி

## அஸ்வர் எம்.பி. தெரிவிப்பு

சில சக்திகள் இலங்கைத் தமிழர்களுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தி வருவதாக ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் நடைபெற்று முடிந்த 15 ஆவது இஸ்லாமிய தமிழ் இலக்கிய பேரவை அமர்வுகளில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை வாழ் தமிழர்களுக்கு நெருக்கடி நிலைமையை ஏற்படுத்தும் நோக்கில் தமிழகத்தைச் சேர்ந்த சில சக்திகள் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதாக குரல் கொடுக்கும் தமிழக அரசியல்வாதிகள் இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்வதன் மூலம் தமிழ் மக்கள் இலங்கையில் அனுபவிக்கும் சுதந்திரம் பற்றி நேரடியாக அவதானிக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மற்றும் ஏனைய முக்கிய நகரங்களில் பாரியளவில் தேர்த்திருவிழாக்கள் நடைபெறுவதாகவும் கம்பன் மற்றும் வள்ளுவனுக்கு பெரும் விழாக்கள் எடுக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறுகதைகள், நாவல்கள் மற்றும் ஏனைய இலக்கிய படைப்புக்கள் மாதந்தோறும் நூற்றுக்கணக்கில் இலங்கையில் பிரசுரமாவதாக அவர் தெரிவித்துள்ளார். இலங்கைத் தமிழர்களின் கலைப்படைப்புக்கள் தமிழகத்திலும் பிரசுரம் செய்யப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருவருள்மிகு கைதடி வீர கத்திப் பிள்ளையார் கோவில் முதலாய கோவில்கள் ஸ்ரீ பர்வதவர்த்தனி அம்பாள் சமேத இராமலிங்க சுவாமி (சிவன்) கரவருட மஹோற்சவம் நாளை புதன் கிழமை காலை 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு சப்பறத்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் இடம்பெறும்.

எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 11 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (ஸ்ரீ-2)




- ★ 1545-இங்கிலாந்தின் மேரி றோஸ் என்ற போர்க்கப்பல் போர்ட்ஸ்மவுத் என்ற இடத்தில் மூழ்கியதில் 35 பேர் மட்டும் தப்பினர்.
- ★ 1553-9 நாட்களே இங்கிலாந்தின் அரசியாக இருந்த ஜேன்கிறே பதவியிழந்தாள். முதலாம் மேரி அரசியாக முடிசூடினாள்.
- ★ 1870-பிரான்ஸ் புரூசியா மீது போரை ஆரம்பித்தது.
- ★ 1900-பாரிசில் முதலாவது சுரங்கத் தொடரூந்து சேவை ஆரம்பமாயிற்று.
- ★ 1912-அரிசோனா மாநிலத்தில் 190 கி.கி. எடையுள்ள விண்கல் ஒன்று வீழ்ந்து. கிட்டத்தட்ட 16 ஆயிரம் துகள்களாகச் சிதறுண்டது.
- ★ 1940-இரண்டாம் உலகப் போர்: இத்தாலியப் போர்க்கப்பல் ஒன்று மூழ்கியதில் 121 பேர் கொல்லப்பட்டனர்.
- ★ 1947-பர்மிய தேசியவாதியான ஒங் சான் மற்றும் அவரது 6 அமைச்சர்கள் கொல்லப்பட்டனர்.
- ★ 1967-வட கரோலினாவில் போயிங் 727 மற்றும் செஸ்னா 310 விமானங்கள் நடுவானில் மோதியதில் 82 பேர் கொல்லப்பட்டனர்.
- ★ 1979-நிக்கராகுவாவில் அமெரிக்க சார்பு சமோசா அரசு சண்டினீ ஸ்டா கிளர்ச்சிவாதிகளால் கவிழ்க்கப்பட்டது.
- ★ 1980-ஒலிம்பிக் விளையாட்டுக்கள் மொஸ்கோவில் ஆரம்பமாகின.
- ★ 1985-இத்தாலியில் அணைக்கட்டு ஒன்று இடிந்ததில் 268 பேர் கொல்லப்பட்டனர்.
- ★ 1996-ஒலிம்பிக் விளையாட்டுக்கள் அட்லாண்டாவில் ஆரம்பமாகின.

**பிறப்புக்கள்**

- ★ 1827-மங்கள் பாண்டே, சிப்பாய்க் கிளர்ச்சியை ஆரம்பித்த பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் சிப்பாய் (இ.1857)
- ★ 1893-விளாடிமீர் மயகோவ்ஸ்கி, ரஷ்யக் கவிஞர் (இ.1930)
- ★ 1938-ஜெயந்த் விஷ்ணு நர்லிகர், இந்திய அறிவியலாளர்
- ★ 1979-தில்கார பெர்னாண்டோ, இலங்கைத் துடுப்பாட்ட அணியின் சிறப்பு வேகப் பந்து வீச்சாளர்
- ★ 1979-மாளவிகா, தமிழ்த் திரைப் பட நடிகை

**இறப்புக்கள்**

- ★ 1947-சுவாமி விபுலானந்தர், தமிழிசை ஆய்வாளர் (பி.1892)
- ★ 1947-ஒங் சான், பர்மிய தேசியவாதி (பி.1915)
- ★ 1987-ஆதவன், தமிழ் சிறுகதை எழுத்தாளர் (பி. 1942)

**சிறப்பு நாள்**

- ★ நிக்கராகுவா- சுதந்திரதினம்(1979)

# சீனா விடுத்த எச்சரிக்கைகளையும் மீறி ஒபாமா - தலாய்லாமா பேச்சுவார்த்தை

## சீன அரசாங்கம் கொதிப்பு; அமெ.தூதரை அழைத்து கண்டனம்

(பீஜிங்)

தலாய்லாமாவை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா சந்தித்துப் பேசியதன் மூலம் சீனாவின் உள்நாட்டு விவகாரத்தில் அமெரிக்கா தலையிட்டுள்ளது என சீன அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும் தலாய் லாமாவும் வெள்ளை மாளிகையில் கடந்த சனிக்கிழமை சந்தித்துப் பேசினார். சீனா விடுத்த எச்சரிக்கைகளையும் மீறி இந்த சந்திப்பு நடந்தது. அதையடுத்து பீஜிங்கில் உள்ள அமெரிக்கத் தூதரை அழைத்து சீன வெளியுறவுத்துறை துணை அமைச்சர் கியூ டியான்காய் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அதுபோல வோஷிங்டனில் உள்ள அமெரிக்காவுக்கான சீனத் தூதர் ஷாங் யேசுய் மூலமாகவும் அமெரிக்க அரசுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மா ஷா வோஸ் இது குறித்து வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது,

தலாய்லாமாவை ஒபாமா சந்தித்துப் பேசியதன் மூலம் சீனாவின் உள்நாட்டு விவகாரத்தில் தேவையற்ற தலையீடு செய்ததோடு சீன மக்களின் நம்பிக்கையை அமெரிக்கா புண்படுத்தியுள்ளது.

இச்சந்திப்பு இரு தரப்பு உறவுகளில் விரிசலை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக சீனா விடுத்த பல கட்ட எச்சரிக்கைகள் புறந் தள்ளப்பட்டுள்ளன. திபெத் விடுதலை கோரும் சீனப் பிரிவினைவாத சக்திகளுக்கு மறைமுக ஆதரவை வழங்குவதை அமெரிக்கா உடனே நிறுத்த வேண்டும். திபெத் தொடர்பான விவகாரங்கள் அனைத்தும் சீனாவின் உள்நாட்டு நலன் சார்ந்தது என்பதை அமெரிக்க புரிந்து கொள்ள வேண்டும்.

அரசியல் ரீதியாக நாடு கடத்தப்பட்டுள்ள தலாய்லாமா மதம் என்ற பெயரில் பிரிவினைவாத நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். அவரை எந்த வெளிநாட்டு அதிகாரியும் சந்தித்துப் பேசுவதை சீனா வன்மையாகக் கண்டிக்கிறது.

அதுபோல் தலாய்லாமா வழியாக சீன உள்நாட்டு விவகாரத்தில் தலையிட முனையும் தனிநபர் உட்பட எந்த ஒரு நாட்டையும் சீனா வன்மையாக கண்டிக்கிறது. தலாய் லாமாவை அமெரிக்காவுக்குள் அனுமதித்தது.

அவரை ஒபாமா சந்தித்தது போன்ற செயல்களின் மூலம் சீனா-அமெரிக்கா இடையிலான சர்வதேச உறவுமுறை விதிகள் அப்பட்டமாக மீறப்பட்டுள்ளன. இரு நாடுகளுக்கு இடையே உறவுகள் பாதிக்கப்பட்டுள்ளன.



சீன -அமெரிக்க உறவை வலுப்படுத்த வேண்டுமெனில் இருதரப்பிலும் ஒத்திசைவான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது அவசியம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இதுகுறித்த வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

ஒபாமா-தலாய்லாமா சந்திப்பின் மூலம் திபெத்திற்கான உரிய மதம், கலாசாரம், மொழி, அடையாளம் மற்றும் மனித உரிமை போன்றவற்றை பாதுகாக்க வேண்டும் என்பதில் அமெரிக்கா உறுதியாகவுள்ளது. திபெத் சீனாவின் ஒரு பகுதி என்பதால் அதன் விடுதலைக்கு அமெரிக்கா உதவாது. நேரடி பேச்சு வழியாகவே இதற்கு தீர்வு காண முடியும் என ஒபாமா வலியுறுத்தியுள்ளார் என கூறப்பட் டுள்ளது.

இது குறித்து தலாய்லாமா கூறுகையில்,

மிகப் பெரிய ஜனநாயக நாட்டின் ஜனாதிபதி ஒபாமா திபெத்தின் மத சுதந்திரம், மனித உரிமை மற்றும் மாண்புகளை பாதுகாக்க அமெரிக்கா பரிபூரண ஆதரவு தருமென அவர் கூறியது மகிழ்ச்சி அளிக்கிறது.

திபெத்திற்கு விடுதலை வேண்டும்என நாங்கள் எதிர்பார்க்கவில்லை. விரைவில் சீன அரசுடன் எனது பிரதிநிதிகள் பேச்சு தொடங்குவார்கள் என்றார். (ஸ்ரீ-2)

# பணிய மறுக்கும் கடாபி; லிபியாவில் தொடர் தாக்குதல்



(ட்ரிபோலி)

லிபிய ஜனாதிபதி கடாபி நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்ற கோரிக்கை கடுமையாக வலுத்த போதிலும் அவர் அங்கிருந்த வெளியேற மறுத்து வருகிறார்.

தனது ஆதரவாளர்களிடையே பேசிய கடாபி ஒரு போதும் நாட்டை விட்டு வெளியேற மாட்டேன் என்று கூறியுள்ளார். இதனால் அங்கு தொடர்ந்து தாக்குதல் நடைபெற்று வருவதோடு ஏராளமான உயிர்ச் சேதமும் ஏற்பட்டு வருகிறது.

ஞாயிற்றுக்கிழமை மட்டும் அங்கு 13 முறை குண்டுச்சத்தம் கேட்டது. எய்ன்ஜரா மாவட்டத்தில் உள்ள அரச அலுவலகங்களையும் தஜ்ரா என்ற பகுதியில் உள்ள இராணுவப் படைகளின் முகாம்களையும் புரட்சியாளர்கள் சூறையாடியதாக தொலைக்காட்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

தலைநகரின் மேற்குப் பகுதியில் உள்ள ஜவியா பகுதியில் தனது ஆதரவாளர்களிடையே கடாபி உரையாற்றினார். அப்போது நான் இங்கிருந்து வெளியேற வேண்டும் என்று கூறுகிறார்கள். நான் ஒரு போதும் இங்கிருந்து வெளியேற மாட்டேன். எனக்காக நிறைய தியாகங்களை செய்துள்ள என் மூதாதையர்கள் மற்றும் மக்கள் இந்த மண்ணை விட்டு ஒரு போதும் வெளியேற மாட்டார்கள்.

என்னுடைய மக்களுக்காக என்னையே தியாகம் செய்ய தயாராக இருக்கிறேன். இத்தாலி மற்றும் பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து லிபியாவை மீட்க என்னுடைய மூதாதையர்கள் இரத்தம் சிந்திய இந்த மண்ணில் இருந்து வெளியேற மாட்டேன் என்றார்.

முன்னதாக சனிக்கிழமை அரச படையினர் வீசிய குண்டு மற்றும் கண்ணிவெடி தாக்குதலில் சிக்கி 10 பேர் உயிரிழந்தனர். 70 பேர் காயமடைந்தனர். அவர்களில் மேலும் இருவர் ஞாயிற்றுக்கிழமை இறந்ததால் பலியானோரின் எண்ணிக்கை 12 ஆக உயர்ந்தது.

அரச படையினர் லிபியாவின் வடக்கு, கிழக்கு, தெற்குப் பகுதியிலிருந்து வெளியேறத் தொடங்கியுள்ளதாக அங்குள்ள புரட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்தவர்கள் சிகிச்சை பெற்று வரும் அஜ்தபியா மருத்துவமனை டாக்டர் அகமது தினாரி கூறுகையில், காயமடைந்தவர்கள் அனைவரும் கண்ணிவெடி தாக்குதலில் தான் சிக்கியுள்ளனர் என்றார்.

இதுவரை 250 கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. பன்னாட்டு படைகளும் போராட்டக்காரர்களும் சேர்ந்து சனிக்கிழமை பிரேகாவில் இருந்த அரச படைக்கு சொந்தமான ஒரு இராணுவ டாங்கி ஆயுதம் நிரம்பிய 5 வாகனங்கள், ரொக்கெட் லாஞ்சர் ஆகியவற்றை தாக்கி அழித்துள்ளனர். டிரிபோலியின் கிழக்குப் பகுதியில் பன்னாட்டு படைகள் நடத்திய தேடுதல் வேட்டையில் 3 ரேடார்கள், ஏவுகணை, ஆயுதங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றின.

பன்னாட்டு படைகளும் புரட்சியாளர்களுக்கு ஆதரவாக களத்தில் இறங்கி போராடி வருகிறது. லிபியாவில் உள்ள கடாபி எதிர்ப்பாளர்களை அமெரிக்கா அங்கீகரித்துள்ளது. இது ஜனாதிபதி முவம்மர் கடாபிக்கு மிகப் பெரிய பின்னடைவாகும். (ஸ்ரீ-2)

# கராச்சியில் மீண்டும் கலவரம் வெடித்தது

## ஒரு நாளில் 11 பேர் பலி

பாகிஸ்தானின் கராச்சி நகரில் நேற்று முன்தினம் மீண்டும் கலவரம் வெடித்தது. இதில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் உட்பட 11 பேர் 24 மணிநேரத்திற்குள் கொல்லப் பட்டனர். பலர் காயம் அடைந்தனர்.

கடந்த சில மாதங்களாக அங்கு வன்முறை தலைவிரித்தாடுகிறது. சமீபத்தில் அங்கு நடந்த கலவரத்தில் 100 க்கும் மேற்பட்டோர் பலியாகினர். நிலவரம் கட்டுக்குள் வந்த ஒரு வாரத்திற்குள்ளேயே நேற்று முன்தினம் மீண்டும் அந்நகரில் கலவரம் வெடித்துள்ளது.

இந்த சம்பவங்களால் எல்லைப் பாதுகாப்புப் படையினர், துணை நிலை இராணுவப் படையினர் என மொத்தம் 500 இராணுவ வீரர்கள் கராச்சி நகரில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)




# லண்டனிலுள்ள இந்துக்கோவிலில் கொள்ளை: பல இலட்சம் மதிப்புள்ள நகைகள் பறிபோயின

(லண்டன்)

லண்டன் புறநகரில் உள்ள இந்து கோவிலில் பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நகைகள் மற்றும் பணம் கொள்ளையடிக்கப்பட்டது. கோவில் பூசகரின் தங்கச்சங்கிலியையும் கொள்ளையர்கள் பறித்துச் சென்றனர்.

பிரிட்டனின் தலைநகர் லண்டனின் புறநகர் பகுதியான தோர்ன்டன் ஹீத்தில் இந்து கோவில் ஒன்று உள்ளது. இக்கோவிலுக்குள் கடந்த 7 ஆம் திகதி அதிகாலையில் அத்துமீறி நுழைந்த மூன்று கொள்ளையர்கள் கருவறையில் நுழைந்து அங்கிருந்த பல இலட்சம் ரூபா மதிப்புள்ள தங்கச் சங்கிலிகள், குண்டலங்களைத் திருடினர். பின்னர் கோவில் உண்டியலை உடைத்து அதிலிருந்த பணத்தையும் எடுத்தனர்.

கோவில் அலுவலகத்தின் அறைக் கதவை உடைத்து உள்ளே நுழைந்தனர். இந்த சத்தம் கேட்டு பக்கத்து அறையில் உறங்கிக் கொண்டிருந்த கோவில் பூசகர் பதறியெழுந்தார்.

இதைப் பார்த்த கொள்ளையர்கள் அவரை தாக்கியதுடன் அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியையும் பறித்துச் சென்றனர். இதில் பூசகருக்கு கழுத்தில் காயம் ஏற்பட்டது.

இந்தியாவைச் சேர்ந்த இவர் அவ்வப்போது லண்டன் சென்று கோவில் பூஜை பணிகளை மேற்கொள்வார். இது தொடர்பாக கிரைடான் பகுதி பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (ஸ்ரீ-2)


# நியூஸ் ஒவ் த வேஸ்ட் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் கைது

(லண்டன்)

தொலைபேசி ஒட்டுக் கேட்பு விவகாரம் தொடர்பாக பிரிட்டனில் சமீபத்தில் மூடப்பட்ட நியூஸ் ஒவ் த வேல்ட் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் ரிபிகா புரூக்ஸ் (வயது-43) நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

முன்னதாக ஒட்டுக் கேட்பு விவகாரத்துக்கு பொறுப்பேற்று பத்திரிகையை நிறுத்தினார் அதன் உரிமையாளர் முர்டோக்.

கைது செய்யப்பட்டுள்ள ரிபிகா புரூக்ஸ் லண்டன் பொலிஸ் நிலையம் ஒன்றில் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த குற்றச்சாட்டு தொடர்பாக கைது செய்யப்படும் 10 ஆவது நபர் ரிபிகா சுமார் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களின் தொலைபேசியை இந்த பத்திரிகையில் பணியாற்றியவர்கள் ஒட்டுக் கேட்டார்கள் என்று குற்றச்சாட்டு உள்ளது. (ஸ்ரீ-2)



# வடக்கின் வசந்தம்

## பொருளாதார அபிவிருத்தி அமைச்சு







மேன்மை தங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் 2011 யூலை 18 – யூலை 20 வரை யாழ்ப்பாணத்திற்கான மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொள்கிறார். அதன் போது யாழ்ப்பாண மாவட்டத்தின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை ஜனாதிபதி அவர்கள் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

மகிந்த சிந்தனையின் "வடக்கின் வசந்தம்" வேலைத்திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பல்வேறு வேலைத்திட்டங்கள் 13 யூலை 2011 தொடக்கம் 17 யூலை 2011 வரை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பசில் ராஜபக்ஷ அவர்களினாலும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களினாலும் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

**1. நீர்ப்பாசனம்**

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சங்கானை, சாவகச்சேரி, வேலணை நெடுந்தீவு, காரைநகர் பிரதேசங்களில் 6 உவர்நீர்த் தடுப்பணைகள் உருவாக்கும் திட்டங்கள் ரூ.220.06 மில்லியன் செலவில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.





**2.குடிநீர் வழங்கல் சேவைகள்:**

நல்லூர், கோப்பாய், கரவெட்டி, சாவகச்சேரி, பருத்தித்துறை, வேலணை பிரதேச செயலாளர் பிரிவுகளில் பின்வரும் 8 குடிநீர் விநியோகத்திட்டங்கள் ரூ.618.5 மில்லியன் மதிப்பீட்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

1. மணியந்தோட்டம் குடிநீர் விநியோகத் திட்டம்
2. இருபாலை குடிநீர் விநியோகத் திட்டம்
3. கோப்பாய் ஊறணி குடிநீர் விநியோகத் திட்டம்
4. சரசாலை வேம்பிராய் குடிநீர் விநியோகத் திட்டம்
5. வல்வெட்டித்துறை குடிநீர் விநியோகத் திட்டம்
6. மண்டைதீவு குடிநீர் விநியோகத் திட்டம்
7. பருத்தித்துறை குடிநீர் விநியோகத் திட்டம்
8. கரணவாய் குடிநீர் விநியோகத் திட்டம்



**3. வீதி அபிவிருத்தி நிர்மாணப் பணிகள்:**

யாழ்ப்பாண மாவட்டத்தில் சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம், கெயர் திட்டம், மற்றும் மத்திய அரசு ஆகியவற்றின் உதவியின் மூலம் கிராமிய, நகர வீதிகளின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. மேலும் நெடுந்தீவு , ஊர்காவற்துறை ,குறிகட்டுவான் இறங்குதுறைகளின் நிர்மாணப்பணிகளும், நெடுந்தீவுக்கும் குறிகட்டுவானுக்குமிடையிலான "வடதாரகை" படகு சேவையும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன



**4. மின் விநியோகம்:**

மணியந்தோட்டம், தெல்லிப்பளை, மண்கும்பான், சூரியவத்தை, மருதங்கேணி, வல்லிபுரம் கிராமங்களுக்கான மின்விநியோகத்திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

**5. சமுர்த்தி உதவித் திட்டப் பயன்கள்:**

சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வாழ்வாதார அபிவிருத்தித் திட்டங்கள், சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தின் வேலைத்திட்டங்கள், சமுர்த்தி வங்கியூடான இலகுகடன் வசதிகள், சமுர்த்தி முத்திரைகள் அதனோடு இணைந்த உதவிகள் என பல்வேறு வகைப்பட்ட வறுமைத் தணிப்பு மற்றும் அபிவிருத்தி மேம்பாட்டுத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் யாழ் மாவட்ட பிரதேசங்களின் சமுர்த்தி நன்மை பெறும் பயனாளிகள் பலரும் நன்மையடைந்தனர்.



**6. துரித மீட்சித் திட்டம்:.**

இத்திட்டத்தின் கீழ் ரூ.324 மில்லியன் பெறுமதியான உட்கட்டுமான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக வீதிகள், சந்தைகள், பாடசாலைகள், குடிநீர் விநியோகத்திட்டங்கள், கட்டடங்கள், ஆகியவற்றின் புனர்நிர்மாணப் பணிகள் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளன

(சி-3808)

**7. மீள் எழுச்சித் திட்டம்:**

இத்திட்டத்தின் கீழ் பின்வரும் உதவிகள், வழங்கப்பட்டன.

1. விவசாயிகளுக்கான நீர்ப்பம்பிகள், தெளிகருவிகள்
2. மீனவருக்கான கடற்றொழில் உபகரணங்கள் மற்றும் கடற்றொழில் சங்கங்களுக்கான தளபாடங்கள்
3. பாடசாலைகளுக்கான கட்டட நிர்மாணப் பணிகள்
4. உள்ளூர் வீதிகள் புனரமைப்பு
5. பாடசாலை மாணவர்களுக்கான துவிச்சக்கர வண்டிகள்



**8. கடற்றொழில் சேவைகள் :**

1. கடற்றொழிலாளர்களின் நன்மை கருதி வள்ளங்களை பாதுகாப்பான முறையில் நிறுத்துவதற்காக வான் ஆழமாக்கும் பணி பருத்தித்துறை பிரதேச செயலகப்பிரிவில் ஆரம்பத்துவைக்கப்பட்டுள்ளன.
2. கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டன.



# இலங்கைத் தமிழர்கள் சம உரிமையுடன் சுதந்திரமாக வாழ நடவடிக்கை எடுக்க வேண்டும்

## உலகத் தமிழர் பாதுகாப்பு மாநாட்டில் தீர்மானம்

இலங்கைத்தமிழர்கள் சம உரிமையுடன் வாழ மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக தமிழறிஞர்களை உலகம் முழுவதும் அனுப்பி தமிழ் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவேண்டும் என தஞ்சையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற உலகத் தமிழர் பாதுகாப்பு மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தஞ்சை கரந்தைத் தமிழ்ச் சங்க நூற்றாண்டு விழாவையொட்டி நடைபெற்ற இம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு;

✳செம்மொழியாக அறிவிக்கப்பட்டுள்ள தமிழ்மொழியை ஆட்சி மொழியாக மத்திய அரசு அறிவிக்க வேண்டும்.

✳மத்திய அரசு உலகின் அனைத்து நாடுகளிலும் வாழும் தமிழர்களுக்கு போதிய பாதுகாப்பு அளிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இலங்கைத் தமிழர்கள் சம உரிமையுடன் சுதந்திரமாக பாதுகாப்பாக வாழ நடவடிக்கை எடுக்க வேண்டும்.

✳உலகிலுள்ள பல்கலைக்கழகங்களில் அந்தந்த நாட்டு மொழிகளுக்கு இணையாக தமிழ்த்துறை ஒன்றைத் தொடங்கி தமிழை வளர்க்க முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

✳தமிழக தமிழறிஞர்களை உலகெங்கும் அனுப்பி தமிழ் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். ஐ.நா அறிக்கையின்படி இலங்கை மீது நடவடிக்கை எடுக்க மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்த வேண்டும்.

✳ நீண்ட நாட்களாக தீர்க்கப்படாமல் உள்ள காவிரி, முல்லைப் பெரியாறு, அணை பாலாறு உள்ளிட்ட பிரச்சினைகளை தீர்க்க மத்திய மாநில அரசுகள் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

✳ இலங்கையின் கட்டுப்பாட்டில் உள்ள கச்சதீவை மீட்பதற்கான முயற்சியை மேற்கொள்ள மத்திய மாநில அரசுகள் இணை ந்து விரைவான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டில் நந்தனம் கலைக் கல்லூரி விரிவுரையாளர் ரேவதி கிருபாகரன், ஓய்வு பெற்ற தமிழாசிரியர் புலவர் உ.தேவதாசு சிறப்புரையாற்றினர்.

திராவிடர் இயக்க தமிழர் பேரவை பொதுச் செயலர் சுப வீரபாண்டியன் தலைமை மற்றும் நிறைவுப் பேருரையாற்றினார். (ஸ்ரீ-2)

# கடலில் படகு மூழ்கி 4 மீனவர்கள் பலி

தூத்துக்குடியிலிருந்து படகொன்றில் கடலுக்கு மீன்பிடிக்க சென்றவேளை கடும் காற்று வீசியதில் படகு கவிழ்ந்து 4 மீனவர்கள் பலியாகினர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, தூத்துக்குடியிலிருந்து படகொன்றில் 5 மீனவர்கள் நேற்று அதிகாலை ஒரு மணிக்கு மீன் பிடிப்பதற்காக சென்றனர். நடுக்கடலில் காற்று பலமாக வீசியதையடுத்து படகு நீரில் மூழ்கியது. இதில் 4 பேர் பலியானதுடன் ஒருவர் நீந்திக்கரைசேர்ந்துள்ளார்.

இதுவரை இரு மீனவர்களின் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (ஸ்ரீ)

# காங்கிரஸ் கட்சியுடன் முதல்வர் கூட்டணி வைக்கக்கூடாது

## சீமான் வலியுறுத்து

(சென்னை)

காங்கிரஸ் கட்சியுடன் முதல்வர் ஜெயலலிதா கூட்டணி வைக்கக் கூடாது என நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்.

மதுரையில் நடைபெற்ற முல்லை பெரியாறு உரிமை மீட்பு பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், முல்லை பெரியாறு அணையை முதலில் கட்டிய போதுயாருக்கும் எவ்வித பிரச்சினையும் இல்லை. ஆனால் 1976 ஆம் ஆண்டு இடுக்கி இணை கட்டிய பின்னர் தான் பிரச்சினை ஏற்பட்டது.

நமது மாநிலத்தில் விளையும் உணவு பொருட்கள் மற்றும் மின்சாரத்தை மற்ற மாநிலங்களுக்கு நாம் தருகிறோம். ஆனால் அந்த உணவு பொருட்களுக்கு தேவையான தண்ணீரை அண்டையமாநிலங்கள் தரமறுக்கின்றன.

இதேநிலை தொடர்ந்தால் அடுத்த போராட்டம் எங்கள் உரிமையை மீட்கும் போராட்டமாக தான் இருக்கும் இந்த அணை பிரச்சினைக்கு முதலில் இருந்தே காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள்தான் காரணம்.

அதேபோல் என் இன அழிவிற்கும் காங்கிரஸ் கட்சிதான் காரணம். எனவே தான் அந்த கட்சியை தமிழ்நாட்டில் தோற்கடித்தோம். தமிழகத்தில் எதிர்வரும் காலங்களில் காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வரக்கூடாது. அந்த கட்சியுடன் இனி எந்த கட்சியும் கூட்டணி வைக்கக் கூடாது ஜெயலலிதாவும் கூட்டணி வைக்கக்கூடாது என்றார். (ஸ்ரீ-2)

# தி.மு.க.கூட்டணியிலிருந்து வெளியேறுமா பா.ம.க?

பாட்டாளி மக்கள் கட்சியின் பொதுக்குழு கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி சென்னையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தி.மு.க கூட்டணியில் இருந்து பாட்டாளி மக்கள் கட்சி வெளியேறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இது குறித்து பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் ஜி.கே மணி வெளியிட்ட அறிக்கையில், சென்னை பல்கலைக்கழகத்துக்கு பின்புறம் உள்ள சுவாமி சிவானந்தாசாலையில் அண்ணா கலையரங்கத்தில் பொதுக்குழுவின் கூட்டம் எதிர்வரும்27 ஆம் திகதி இடம் பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சி தேர்தலில் தி.மு.க வுடனான கூட்டணி தொடருமா என்பது குறித்து கட்சியின் பொதுக்குழு கூடி முடிவெடுக்கும் என பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் பாட்டாளி மக்கள் கட்சியின் பொதுக்குழு கூட்டம் முக்கியத்துவம் பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று தி.மு.க.வும் தனது மாநில செயற்குழு மற்றும் பொதுக்குழுக் கூட்டத்தை கோவையில் கூட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# சுவிஸ் வங்கியில் இந்தியர்களின் கறுப்புப்பணம் ரூ. 11 ஆயிரம்கோடி

(ஜெனீவா)

சுவிற்சர்லாந்து நாட்டில் உள்ள வங்கிகளில் இந்தியர்களின் பணம் 11ஆயிரத்து 250 கோடிக்கு மேல் இருப்பதாக சுவிஸ் மத்திய வங்கி அறிவித்துள்ளது. முன்னதாக சுவிஸ் வங்கிகளில் இந்தியர்களின் கறுப்புப் பணம் 20 இலட்சம் கோடி முதல் 50 இலட்சம் கோடி வரை இருப்பதாக பல்வேறு அரசியல் கட்சிகள், அரசுசாரா நிறுவனங்கள் மதிப்பிட்டுக்கூறியிருந்தன.

இந்நிலையில் இந்தியர்களின் பணம் 11 ஆயிரத்து 250 கோடி மட்டுமே தங்கள் நாட்டு வங்கிகளில் இருப்பதாக சுவிற்சர்லாந்து அறி வித்துள்ளது. இது குறித்து சுவிஸ்தேசிய வங்கிகளின் தலைவர் வால்டர்மேஜர் தெரிவிக்கையில், எங்கள் நாட்டு வங்கிகளின் இந்த ஆண் டுகளுக்கான புள்ளி விபரத்தின்படி இந்தியா வைச் சேர்ந்தவர்களின் பணம் 11 ஆயிரத்து 250 கோடிக்கு மேல் பல்வேறு வங்கிகளில் உள்ளது. 2009 ஆம் ஆண்டு இது 12 ஆயிரத்து 150 கோடி என்ற அளவிலும் 2008 இல் இதன் தொகை 13 ஆயிரத்து 500 கோடியாகவும் இருந்தது என்றார் அவர். (ஸ்ரீ-4)




# மும்பைக் குண்டுவெடிப்புக்கு பிறரை பலிக்கடா ஆக்கக்கூடாது

## மத்திய அரசே பொறுப்பு– அத்வானி தெரிவிப்பு

(புதுடில்லி

மும்பையில் குண்டுவெடிப்பு சம்பவத்துடன் பிறரை பலிக்கடா ஆக்கக்கூடாது என பாரதி ஜனதா கட்சியின் மூத்த தலைவர் அத்வானி தெரிவித்துள்ளார்.

மும்பையில் கடந்த வாரம் நடந்த தொடர் குண்டு வெடிப்பு சம்பவம் குறித்து மகாராஷ்டிரா முதல்வர் பிரித்திவிராஜ் சவான் இணையத் தளத்தில் குறிப்பிடுகையில், மாநில உள்துறையை கூட்டணிக்கட்சியிடம் ஒப்படைத்தது தவறு என குறிப்பிட்டிருந்தார்.

இதுபற்றி பா.ஜ.க. தலைவர் அத்வானி கூறியதாவது, மும்பை குண்டு வெடிப்பு சம்பவத்துக்கு பிறரை பலிக்கடா ஆக்கக்கூடாது. புலனாய்வுத்துறை மீதோ பொலிஸ் துறை மீதோ தவறு இல்லை என மத்திய அமைச்சகம்கூறியுள்ளது எனவே இந்த விடயத்தில் மாநில முதல்வரையோ உட்துறை அமைச்சரையோ குறை கூறக்கூடாது. குறை கூறப் படவேண்டியது மத்திய அரசு தான். ஏனென்றால் பயங்கரவாத தடுப்புக் கொள்கையை அது மாற்றியதால் தான் இதுபோன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதை பிரதமரும் காங்கிரஸ்தலைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். பயங்கரவாத தடுப்பு கொள்கையில் மாற்றம் செய்யப்படாதவரை இது போன்ற சம்பவங்கள் தொடர்ந்து கொண்டு தான் இருக்கும்.

ஸ்பெக்ட்ரம் ஊழல் தொடர்பாக முன்னாள் அமைச்சர் சிறையில் அடைக்கப்பட்டாலும் கூட்டணி தர்மப்படி தி.மு.க.வை மத்திய அரசு பாதுகாத்துக் கொண்டு தான் இருக்கிறது. இவ்வாறு அத்வானி கூறினார். (ஸ்ரீ-2)



திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே ஆயக்குடியில் வெட்டிய வாழைமரத்தில் இருந்து குலை தள்ளியுள்ளதை படத்தில் காணலாம்.

பழைய செருப்பைத் தைப்பதற்கு கைதேர்ந்த தொழிலாளியிடம் கொடுக்கிறோம். எமது வாக்கை ஒரு வாயாடியிடம் கொடுக்கிறோம்.

–ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இலங்கையில் வாக்காளர்கள் அனுஷ்டிக்கும் மௌனவிரதம்

இயற்கையின் அடிப்படையில் காலம் வகுக்கப்பட்டிருப்பது போல சமய, சமூக, பொருளாதார, அரசியல் ரீதியிலும் காலங்கள் வகுக்கப்பட்டுள்ளன. காற்று, மழை, வெப்பம் என்பன இயற்கையின் அடிப்படையிலான காலப் பிரிப்பிற்கு உதவுகின்றன. இதுபோல சோதிட ரீதியிலும் காலம் வகுக்கப்படுவது வழக்கம்.

ராகுகாலம், அட்டமி, நவமி, கரிநாள், மரண யோகம் என்பன சோதிடத்தில் சுபகாரியங்கள் செய்வதற்கு மறுக்கப்பட்ட காலமாகும்.

இவற்றுக்கு அப்பால் தேவர்களுக்கும், அசுரர்களுக்கும், பிதிர்களுக்கும் காலங்கள் உண்டு. பிதிர் காரியங்கள் நண்பகல் 12 மணிக்கு முன்பாக செய்தாகவேண்டும். அப்போதுதான் எந்தப் பிதிர் குறித்து அர்ப்பணம் செய்கின்றோமோ அந்தப் பிதிர்களுக்கு அவை போய்ச் சேரும் என்பது அபரக்கிரிகைகளின் நிபந்தனை.

இது போல புரட்டாதி மாதத்து மஹாளய பட்ச காலம் என்றும் ஒன்று உண்டு.

இந்தப் பூமியில் வாழ்ந்து மரணித்தவர்கள் ஸ்தூல வடிவில் மீண்டும் பூமிக்கு வருகைதந்து தமது உறவினர்களின் வீடுகளுக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்ட காலம்.

பதினைந்து நாட்களைக் கொண்ட இந்தக் காலத்தில் மேலோகத்திலுள்ள ஆத்மாக்கள் பூலோகத்திற்குச் சென்று தம் உறவினர்களின் படைப்புக்களை உண்டு மகிழ்வதற்காக விசா வழங்கப்படுகிறது.

சுருங்கக் கூறின் இலங்கையிலிருந்து விசா பெற்று லண்டனுக்குச் சென்று ஆறு மாதங்களில் மீண்டும் தாயகம் திரும்புவது போன்ற நடைமுறை பிதிர்களின் விடயங்களிலும் அமுலில் உண்டு எனக் கூறப்படுகிறது. இத்தகைய நடைமுறை கத்தோலிக்கத்தில் நவம்பர்மாதம் இரண்டாம் திகதி என வகுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக காலங்கள் வகுக்கப்பட்டிருப்பது போல, தேர்தல் காலம் என்ற ஒரு காலமும் பூலோகத்தில் உண்டு. தேர்தல் காலம் நாட்டிற்கு நாடு வேறுபடும்.

இலங்கையில் தேர்தல் காலம் என்பது மிகவும் முக்கியமான காலம். இந்தக் காலத்தில் வேட்பாளர்கள் வாக்காளர்களின் வீடுகளுக்குச் செல்வர். இங்கு வாக்காளர்கள் வணக்கத்திற்குரியவர்களாகக் கௌரவிக்கப்படுவர்.

அதாவது தேர்தல் காலத்தில் மட்டும் வேட்பாளர்கள் வாக்காளர்களை கும்பிடுவர். தேர்தல் முடிந்தபின் வெற்றிபெற்ற வேட்பாளரை வாக்காளர்கள் கும்பிடவேண்டும்.

தோற்றுப்போன வேட்பாளர்கள் அடுத்த தேர்தல் காலம் வரை வாக்காளர்களுடன் எந்த வித பேச்சு, கதை, சிரிப்பு, தலையாட்டல் எதுவும் செய்யாமல் இருப்பர்.

தேர்தல் காலத்தில் வேட்பாளர்கள் வாக்காளர்களைக் கும்பிட்டு தங்களின் கொள்கைகள், கோட்பாடுகள், விஞ்ஞாபனங்கள் என்பவற்றைத் தெரிவிப்பர்.

இங்கு வேட்பாளர்கள் வேறுபட்ட கட்சிகள் சார்ந்தவர்களாக, சுயேட்சைக் குழுக்கள் சார்ந்தவர்களாக இருப்பர்.

இலங்கையில் இருக்கக்கூடிய தேர்தல் காலங்களில் வாக்காளர்கள் மௌன விரதம் அனுஷ்டிக்கும் வழக்கம் உண்டு.

ஆம், உங்களுக்குத்தான், கட்டாயமாக, அவர்களுக்கில்லை, நீங்கள்தான் எங்கட..., இப்படியான சொற்பதங்களை மட்டுமே மௌன விரதத்தின்போது பயன்படுத்துவர்.

இலங்கையில் தேர்தல் காலத்தில் வாக்காளர்கள் அனுஷ்டிக்கும் மௌனவிரதம், ஆயுள், ஆரோக்கிய, சந்தான விருத்திக்கான விரதமாக கருதப்படுகின்றது.

# எழுதுமட்டுவாழில் மீள் குடியேற்றம்

உயர் பாதுகாப்பு வலயத்திற்கு உட்பட்ட எழுதுமட்டுவாழ் தெற்கு ஜே/333 கிராமசேவையாளர் பிரிவில் நாளை புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கும், நாகர் கோயில் ஜே/423, ஜே/424, ஜே/425 கிராமசேவையாளர் பிரிவுகளில் நாளை மறுதினம் பிற்பகல் 2.00 மணிக்கும் மக்கள் மீள் குடியமர்த்தப்படவுள்ளதாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட எழுதுமட்டுவாழ் தெற்கு பிரதேசமானது கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு மக்கள் மீள் குடியமர்விற்கு அனுமதி அளிக்கப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இங்கு 278 குடும்பங்களைச் சேர்ந்த 991பேர் மீள் குடியமர்த்தப்படவுள்ளனர்.

அத்துடன் நாகர்கோயிலில் யாழ். மாவட்ட கட்டளைத்தளபதியின் அனுமதியுடன் 683 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 830 பேர் மீளக் குடியமர்த்தப்படவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார். (சு)

# மருத்துவ அறிக்கை பெற நீதிமன்றம் உத்தரவு

சுதந்திர வர்த்தக வலயத்தில் கடந்த மே மாதம் 30 ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை எதிர்த்து சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள் 10 பேரால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று திங்கட்கிழமை உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ் விசாரணையின்போது காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மனுதாரர்களான சுதந்திர வர்த்தக வலய ஊழியர்களின் மருத்துவ அறிக்கைகள், சிகிச்சை அட்டைகள், வேறு மருத்துவக் கூற்றுக்களை மருத்துவ அதிகாரிகளிடமிருந்தும் தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளரிடமிருந்தும் பெற்றுக் கொள்ளுமாறு உயர்நீதிமன்றம் பதிவாளருக்கு அறிவுறுத்தியது. (எ-8)

# சந்தன மரக்குற்றிகளை கடத்தி விற்பனை செய்த 11 பேர் கைது

(கொழும்பு)

பாரியளவிலான சந்தன மரக் குற்றிகளை கடத்தி விற்பனை செய்த 11 பேர் கொண்ட குழுவினரை வெலிமடை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வெலிமடை குருதலாவை மற்றும் போகஹகும்புர ஆகிய பகுதிகளில் சந்தன மரக்குற்றிகள் மறைத்து வைக்கப்பட்டிருந்த இடங்களையும் சந்தன எண்ணெய் உற்பத்தி நிலையத்தையும் பொலிஸார் சுற்றிவளைத்துள்ளனர்.

இங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த 5 ஆயிரத்து 45 கிலோ கிராம் சந்தனக் கட்டடைகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்பில் எண்ணெய் உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்ட அடுப்பையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் வெலிமடை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளனர். (ஸ்ரீ-2)

# நெல் மற்றும் அரிசியின் விலை மேலும் குறைவடையும்

(கொழும்பு)

சந்தைக்கு புதிய கையிருப்பு வரவுள்ள நிலையில் நெல் மற்றும் அரிசியின் விலை அடுத்த வாரமளவில் மேலும் குறைவடையு மென்று எதிர்பார்க்கப்படுவதாக விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தின் பேச்சாளர் எஸ்.ஏ.சி.யூ.சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

அரிசி வகைகளின் விலைகள் அண்மையில் குறைவடைந்துள்ளன. ஒரு கிலோ பச்சை அரிசி 50 ரூபா முதல் 60 ரூபா வரை விற்பனை செய்யப்படும் அதேவேளை ஒரு கிலோ சிவப்புப் பச்சை அரிசி 58 ரூபா முதல் 65 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது. பாஸ்மதி, கீரி சம்பா ஆகியவற்றின் விலை குறைவடைந்துள்ளன. ஒரு கிலோ பாஸ்மதி அரிசி 80 ரூபா முதல் 100 ரூபா வரையும் ஒரு கிலோ கீரி சம்பா 115 ரூபா முதல் 120 ரூபா வரையும் விற்பனை செய்யப்படுகின்றது.

கொழும்பை விட ஏனைய பகுதிகளில் அரிசியின் விலை குறைவாகக் காணப்படுவதாகவும் அவர் கூறினார். (ஸ்ரீ-2-4)

# கொழும்பு தேசிய வைத்தியசாலையில் எக்கோ பரிசோதனைகள் பாதிப்பு

(கொழும்பு)

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் இருதயநோய் சிகிச்சைப் பிரிவின் எக்கோ பரிசோதனை நடவடிக்கைகள் பாதிக்கப்பட் டுள்ளன.

எக்கோபரிசோதனைகருவிகள்பொருத்தப்பட்டுள்ள அறையின் குளிரூட்டிக் கட்டமைப்பு செயலிழந்துள்ளமையே இதற்குக் காரணம் என அகில இலங்கை வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் டாக்டர் கிஷாந்த தசநாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய கொழும்பு தேசிய வைத்திய சாலையின் இருதய நோயாளர்களுக்கான எக்கோ பரிசோதனை ஸ்தம்பிதமடைந்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

இதன் காரணமாக வைத்தியசா லைக்கு வரும் நோயாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் பிரதி சுகாதார அமைச்சர் லலித் திசாநாயக்கவிடம் வினவிய போது இது குறித்து உடனடியாக ஆராயவுள் ளதாக தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# கோமா நிலையில் முபாரக்

(கெய்ரோ)

எகிப்தின் முன்னாள் பிரதமரான ஹோஸ்னி முபாரக்கின் 30 ஆண்டு கால ஆட்சிக்கு எதிராக பொதுமக்கள் போராட்டம் நடத்தினர். இதனால் அவர் பதவி விலகினார்.இதைத் தொடர் ந்து தற்போது இராணுவத்திடம் ஆட்சி அதிகாரம் உள்ளது. ஆட்சியில் இருந்த போது இலஞ்ச ஊழலில் ஈடுபட்டதாகவும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை கொன்று குவித்ததாகவும் முபாரக் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சிறையில் அடைக்கப்பட்ட அவருக்கு மாரடைப்பு மற்றும் உடல் நலக் கோளாறு ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து அவர் செங்கடல் பகுதியில் உள்ள ஷாம்எல்-ஷேக் நகரில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். இவர் மீதான வழக்கு விசாரணை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி தொடங் கவுள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் சிகிச்சையின் போது அவரது உடல் நிலை மோசமடைந்தது. இதைத் தொடர்ந்து அவர் கோமா நிலைக்கு சென்று விட்டார். இந்த தகவலை அவரது சட்டத்தரணி பரீத் எல்.டீப் தெரிவித்ததாக தொலைக் காட்சியில் செய்தி வெளியானது. ஆனால் அதை வைத்தியசாலையின் தலைமை வைத்தியர் அசெம் அஷ்ஸாம் மறுத்துள்ளார்.

நான் அவரது உடல் நிலையை பரிசோதித்தேன். தற்போது அவர் நன்றாக இருக்கிறார் .இரத்த அழுத்தம் குறைவு காரணமாகத்தான் சிறிது மயக்கம் ஏற்பட்டதே தவிர அவர் கோமா நிலைக்குச் செல்லவில்லை. அவரது உடல்நிலையை டாக்டர்கள் தீவிரமாக கண்காணித்து வருகிறார்கள். மயக்கத்தில் இருந்து அவரை மீட்க போராடி வருகின்றனர் என தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



## உள்ளத்தைத் திறந்து வை!

எவராலும் தமது சொந்த ஆன்மாவையோ, கடவுளையோ அறிய இயலாது.ஆனால் நாம் ஆன்மாவாகவும் கடவுளாகவும் உள்ளோம்.

பண்டைக்காலத்தில் கடவுளை மறுப்பதே நாத்திகமாகியிருந்தது. இப்போது தன்னம்பிக்கையை மறுப்பது நாத்திகமாக உள்ளது.

நம்முடைய பிரார்த்தனைகளில் கடவுளை நம் தந்தையாக ஒப்புக் கொண்டு விட்டு அன்றாட வாழ்க்கையில் வெளியாரை நம் சகோதரர்களாக அங்கீகரிக்காமலிருப்பதில் நியாயமில்லை.

நாம் செலுத்தும் பணிவுக்கும் மரியாதைக்கும் பிரதிபலனாக இறைவன் ஏதேனுமொரு நலனைத்தர வேண்டுமென்று நாம் எதிர்பார்க்கும்வரை உண்மையான அன்பு உண்டாகாது.

உலகத்தில் அனைத்தையும் துறந்து மன உணர்ச்சிகளின் தீவிரத்தை அடக்கிக் கொண்டு அமைதியை நாடுகிறவனே சுதந்திரபுருஷனும் பெரியோனும் ஆவான்.

நமது உள்ளங்களை நாம் எப்போதும் திறந்து வைத்திருந்தால் பிரபஞ்சத்திலுள்ள நல்ல நினைவுகள் அனைத்திற்கும் உரிமையுள்ளவர்களாகி விடுவோம்.

நாம் அனைவரும் விளக்குகளைப் போல பிறருக்கு ஒளி கொடுத்து பயனுள்ள வாழ்க்கை வாழ்வோம்.

# யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம் ஊவா மாகாணத்தினால் அமைக்கப்பட்ட இரண்டு மாடிக்கட்டிடத் திறப்பு விழா-19.07.2011



## ஊவா மாகாணத்தினால் யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்திற்கு வழங்கப்பட்ட இரண்டு மாடிக்கட்டிட திறப்பு விழா 19.07.2011 அன்று வழங்கப்பெற்ற வாழ்த்துப்பா

இந்து சமுத்திரம் ஈன்றெடுத்த
எழிலுடை முத்தாம் எம்இலங்கை
சுந்தரந் தமிழும் சிங்களமும்
சுடர்மிகு அறிவினில் துலங்கிடுமே
சிந்தை கவர் பதுளை மொனராகலை
சேர்ந்த நல்லூவா மாகாணம்
அந்தமில் புகழோடு என்றென்றும்
அவனியில் உயர்ந்து வாழியவே

இயற்கை, காடுகள், நீர்வீழ்ச்சி
எழில் நமுனுகுல மலைச்சிகரம்
அயர்வின்றி உழைத்திடும் மக்கள் ஒன்றாய்
அன்பால் அளித்த நன் நிதி தந்த
அமைச்சர் ஆளுனர் உயர்கல்விச்
செயலாளர் என்ற யாவருமே
இமையா முக்கண் இறையருளால்
என்றும் சிறந்து வாழியவே

அன்பின் உயர்வைக் காட்டிடவே
இரண்டு மாடிக் கட்டிடத்தை
நன்றாய் அமைத்து நானிலத்தில்
நல்ல சேவை செய்துயர்ந்து
நின்ற ஊவா மக்கள் சுற்றம்
நித்தம் இறைவன் அருள் பெற்று
குன்றாப் புகழொடு என்றென்றும்
குணத்தில் சிறந்து வாழியவே

கல்வி செல்வம் நிறைந்தோங்க
கலை பண்பாடும் சிறந்தோங்க
சொல்லும் செயலும் உயர்ந்தோங்க
தோட்டம் துரவும் நிறைந்தோங்க
அல்லும் பகலும் அயராது
உழைக்கும் மக்கள் யாவருமே
எல்லா வளமும் மென்மேலும்
பெற்று வாழ வாழ்த்துகிறோம்

சுபம்

ஆக்கம்:- திருமதி க.பாஸ்கரநாதசர்மா (ஆசிரியர்)

(சி-3811)

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்.**

# மகளிர் உலகக் கிண்ணக் கால்பந்து
# முதல் தடவையாக ஜப்பான் சம்பியன்



6ஆவது உலகக்கிண்ண கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஜப்பானிய அணி சம்பியனாகியுள்ளது. நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற இறுதிப்போட்டியில் முன்னாள் சம்பியனான அமெரிக்க அணியை 3–1 கோல் விகிதத்தில் ஜப்பானிய அணி தோற்கடித்தது.

ஜேர்மனியில் பிராங்பர்ட் நகரில் நடைபெற்ற இப்போட்டியில் இடைவேளை வரை எந்த அணியும் கோல் அடிக்கவில்லை.

69 ஆவது நிமிடத்தில் அமெரிக்க வீராங்கனை அலெக்ஸ் மோர்கன் கோல் ஒன்றை அடித்தார். 81ஆவது நிமிடத்தில் அயா மியாமா கோல் ஒன்றை அடித்ததால் நிர்ணயிக்கப் பட்ட நேரத்தில் இரு அணிகளும் 1–1 விகிதத்தில் சமநிலையில் இருந்தன.

அதையடுத்து மேலதிக ஆட்ட நேரத்தில் 104 ஆவது நிமிடத்தில் அமெரிக்க வீராங்கனை அபி வயாம்பச் கோலொன்றை அடித்தார். எனினும் ஜப்பானிய வீராங்கனை ஹொமாரே சுவா கோலொன்றை அடிக்க மேலதிக நேர ஆட்டமும் சமனிலையில் முடிபுற்றது. அதையடுத்து இரு அணிகளுக்கும் தலா 3 பெனால்ட்டி வாய்புக்கள் வழங்கப்பட்டன. இதில் ஜப்பானிய அணி 3:1 விகிதத்தில் வெற்றி பெற்றது. ஜப்பானிய மகளிர் கால்பந்தாட்ட அணி இதற்கு முன் நடைபெற்ற உலகக்கிண்ண போட்டிகளில் 1995 ஆம் ஆண்டு மாத்திரம் கால் இறுதிவரை முன்னேறியிருந்தது. ஏனைய வருடங்களில் முதல்சுற்றுடன் வெளியேறியமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் இம் முறை சொந்த மண்ணில் விளையாடிய நடப்பு சம்பியனான ஜேர்மனியை தோற்கடித்த ஜப்பான் அணி அரையிறுதியில் சுவீடன் அணியை தோற்கடித்திருந்தது. இறுதிப்போட்டியில் 3 ஆவது தடவையாக சம்பியனாகி சாதனை படைக்க காத்திருந்த அமெரிக்க அணியை ஜப்பானிய அணி தோற்கடித்துள்ளது.

இச்சுற்றுப்போட்டியின் சிறந்த வீராங்கனைக்கான தங்கப்பந்து விருதையும் அதிக கோல்களை அடித்தவருக்கான தங்கப்பாதணி விருதையும் ஜப்பானின் ஹோமாரே சவா வென்றார். வெள்ளிப்பந்தை அமெரிக்காவின் அபி வாம்பேச்சும் வெண்கலப்பந்தை அமெரிக்காவின் ஹோப் சோலோவும் வென்றனர். சிறந்த கோல் காப்பாளராக அமெரிக்காவின் ஹோப்சோலோ தெரிவானார்.



ஜெர்மனியில், பெண்களுக்கான உலக கோப்பை கால்பந்து தொடர் நடந்தது. இதில் மூன்றாவது இடத்துக்கான போட்டியில் சுவீடன் அணி, பிரான்சை வீழ்த்தியது. இம்மகிழ்ச்சியில் சுவீடன் அணி வீராங்கனைகள்

## கோபா அமெரிக்கக் கால்பந்து
## பிரேசில் அதிர்ச்சித் தோல்வி
## =அரையிறுதியில் பராகுவே=

தென்னமெரிக்கக் கண்டத்தில் உள்ள நாடுகள் பங்கேற்கும் கோபா அமெரிக்க கோப்பை கால்பந்து போட்டி ஆர்ஜென்டினாவில் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் நடந்த காலிறுதி ஆட்டத்தில் நடப்புச் சம்பியனான பிரேசில்– பரகுவோ அணிகள் மோதின. பிரேசில் அணி தொடக்கத்தில் இருந்தே தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபட்டது. அந்த அணியின் முன்கள வீரர் ரோபினோ கோல் அடிக்கும் வாய்ப்பைத் தவறவிட்டார்.


ஆட்டநேரம் முடியும்வரை இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்கவில்லை. இதனால் கூடுதல் நேரம் கொடுக்கப்பட்டது. கூடுதல் நேரமான 30 நிமிடத்திலும் இரு அணிகளும் கோல் அடிக்க முடியாமல் போனது மிகுந்த ஏமாற்றமே. இதை தொடர்ந்து வெற்றி– தோல்வியை நிர்ணயிக்க பெனால்டி முறை கடைப்பிடிக்கப்பட்டது.

இதில் பிரேசில் அணி அதிர்ச்சிகரமாகத் தோற்று போட்டியிலிருந்து வெளியேறியது. பெனால்டி முறையில் பராகுவே அணி 02 கோல் அடித்து பிரேசிலை வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைந்தது. பராகுவே அணியின் மார்சிலோ, கிறிஸ்டியன் ஆகியோர் பெனால்டி முறையில் கோல் அடித்தனர். பிரேசில் வீரர்கள் சில்வா, சான்டோஸ், பிரட் ஆகியோர் கோல் அடிக்கும் வாய்ப்பைத் தவறவிட்டனர்.

08 முறை சம்பியனான பிரேசில் அணி காலிறுதியில் தோற்றது இரசிகர்களை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது. நேற்று முன்தினம் ஆர்ஜென்டினா அணி அதிர்ச்சிகரமாகத் தோற்றது. முன்னணி நாடுகளான பிரேசில், ஆர்ஜென்டினா கால் இறுதியிலேயே வெளியேற்றப்பட்டன.

1979ஆம் ஆண்டு சம்பியனான பராகுவே அணி அரையிறுதியில் வெனிசுலாவை எதிர் கொள்கிறது. 4–வது காலிறுதியாட்டத்தில் சிலி– வெனிசுலா அணிகள் மோதின. இதில் யாருமே எதிர்பார்க்காத வகையில சிலி அணி தோற்றது. வெனிசுலா 2–1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

## அப்ரிடி முதிர்ச்சி அடையாதவர்



(புதுடில்லி)

பாகிஸ்தான் முன்னாள் அணித்தலைவர் முதிர்ச்சியடையாதவர் என்று இந்திய தொடக்க ஆட்டக்காரர் கௌதம் கம்பீர் தெரிவித்துள்ளார். உலகக்கோப்பையை வென்ற பிறகு இந்த வெற்றியை மும்பைத்தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு அர்ப்பணிப்பதாக காம்பீர் தெரிவித்திருந்தார். இதையடுத்து இதுகுறித்து பேசிய அப்ரிடி, இந்தியர்கள் பாகிஸ்தானியர்களை விட பெரிய மனது படைத்தவர்கள் அல்ல; குறுகியஎண்ணம்கொண்டவர்கள் என்று விமர்சித்திருந்தார். இந்த நிலையில் காம்பீர் இதுகுறித்து மேலும் கூறியதாவது,

அப்ரிடி 16 வயதில் பாகிஸ்தான் அணிக்கு விளையாட வரும்பொது முதிர்ச்சியடையாமல் எப்படி இருந்தாரோ அதேபோன்றுதான் இப்போதும் உள்ளார். மும்பைத்தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு உலகக்கோப்பையை, வெற்றியை அர்ப்பணிப்பதாக கூறியது எனது தனிப்பட்ட கருத்து என்றார்.

2007ஆம் ஆண்டு இந்தியா – பாகிஸ்தான் இடையிலான போட்டியின் போது காம்பீருக்கும் அப்ரிடிக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதனால் காம்பீருக்கு ஒரு ஆட்டத்தில் விளையாடுவதற்கு தடைவிதிக்கப்பட்டது.

அதுகுறித்து பேசிய காம்பீர் அப்ரிடியுடனான அந்த மோதல் சம்பவம் எனது தனிப்பட்ட பிரச்சனை . அவர் என்னைத் திட்டினார். அது குறித்து இங்கு பேசவிரும்பவில்லை என்றார்.

## பயிற்சி ஆட்டம் சமநிலையானது

(லண்டன்)

இந்தியா– இங்கிலாந்தின் சமசெட் அணிகளுக்கிடையிலான மூன்றுநாள் பயிற்சி ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

சமசெட் வீரர் வில்லோபியின் பந்துவீச்சைத் தாக்குப்பிடிக்க முடியாமல் முன்னணி வீரர்கள் விரைவாக வெளியேறினாலும் ரெய்னா சிறப்பாக ஆடி சதம் அடித்தார். அவர் 103 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

முன்னதாக சமசெட் அணி தனது முதல் இன்னிங்ஸில் 96 ஓவர்களில் 03 விக்கெட் இழப்பிற்கு 425 ஓட்டங்கள் எடுத்திருந்த போது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது.

இரண்டாவது நாளான சனிக்கிழமை ஆட்டநேர முடிபில் இந்திய அணி 39 ஓவர்களில் 08 விக்கெட் இழப்பிற்கு 138 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

மூன்றாவது நாளான ஞாயிற்றுக் கிழமை ஆட்டம் சிறிது நேரம் மழையால் பாதிக்கப்பட்டது. பிறகு ஆட்டம் தொடங்கியபோது சிறிசாந் 02 ஓட்டத்தில் வெளியேறினார்.

இதை அடுத்து முனாப் பட்டேல் களமிறங்கினார். ரெய்னா தனி நபராக போராடியதோடு சற்று வேகமாகவும் ஆடினார். இதனால் பந்துகள் பவுண்டரிக்கும் சிக்ஸருக்கும் பறந்தன.

110 பந்துகளில் ரெய்னா சதமடித்தார். அணியின் ஓட்ட எண்ணிக்கை 224 ஓட்டங்களை எட்டியபோது முனாப் பட்டேல் 06 ஓட்டங்களில் ஆட்டமிழக்க இந்தியாவின் முதல் இன்னிங்ஸ் 224 ஓட்டங்களில் முடிவுக்கு வந்தது. சமசெட் தரப்பில் வில்லோபி 06 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.


சமசெட் 260 ஓட்டங்களில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. இதைத் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸில் விளையாடிய சமசெட் அணிக்கு ஸ்ரோரஸும் சுப்பையாவும் சிறப்பான தொடக்கம் அமைத்துக் கொடுத்தனர்.

சுப்பையா 45 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இதை அடுத்து ஸ்ரோரஸுடன் ஜோடி சேர்ந்தார் டிரெகா. இந்த ஜோடி இந்திய வீரர்களின் பந்துவீச்சைப் பதம்பார்த்தது. குறிப்பாக டிரெகா சிக்ஸர் மழை பொழிந்தார். மிஸ்ரா வீசிய 12வது ஓவரில் 04 சிக்ஸர்களுடன் 28 ஓட்டங்களை எடுத்தார்.

இதன் மூலம் டிரெகா 32 பந்துகளில் அரைச்சதம் அடித்தார். ஸ்ரோரஸ் 122 பந்துகளில் சதம் அடித்தார்.

அந்த அணி 41 ஓவர்களில் 02 விக்கெட் இழப்பிற்கு 260 ஓட்டங்கள் எடுத்திருந்த போது ஆட்டத்தை இடைநிறுத்திக்கொள்வதாக அறிவித்தது.

ஸ்ரோரஸ் 109 ஓட்டங்களுடனும், டிரெகா 57 பந்துகளில் 07 சிக்ஸர்கள், 07 பவுண்டரிகள் அடங்கலாக 85 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.



இந்தியத் தரப்பில் மிஸ்ரா 02 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பின்னர் தனது இரண்டாவது இன்னிங்ஸில் விளையாடிய இந்திய அணி 16.4 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 69 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது ஆட்டம் முடித்துக் கொள்ளப்பட்டது. இதனால் ஆட்டம் சமநிலையில் முடிந்தது. காம்பீர் 36 ஓட்டங்களுடனும், முகுந் 33 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

படிப்பகம்
சபை, யாழ்ப்பாணம்.



## இறைமையுள்ள நாடுகளின்...

அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு தென் கொரியாவின் முன்னாள் ஜீரரும் கொரிய இராணுவத்தின் முன்னாள் நீதிபதி, சட்டத்தரணியுமான சோங், த அவுஸ்திரேலியன் பத்திரிகையுடன் உரையாடியுள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

குற்ற நீதிக்கான தேசிய முறைகளை எனது நீதிமன்றம் கொண்டுள்ளது. ஆனால், சில விமர்சகர்கள் குறிப்பாக அமெரிக்கா, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை தேசிய இறைமைக்கு அச்சுறுத்தலென வர்ணித்துள்ளனர்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றமானது இறுதியாக தஞ்சமடையும் இடமாக உள்ளது. போர்க் குற்றங்களுக்கான சிறப்பு விடுபாட்டை முடிபுக்குக் கொண்டு வருவதை அதன் சட்ட பரிமாணம் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கின்றது.

அத்துடன் இதேபோன்று பாரதூரமான குற்றச்செயல்களும் சிறியளவிலேயே உள்ளன றோம் சாசனத்தை அங்கீகரித்துள்ள நாடுகளின் விடயங்களையே சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தால் கையாள முடியும்.

அதேவேளை, தேசிய சட்டமுறைமைகள் செயற்பட முடியாத தன்மையைக் கொண்டிருந்தால் அல்லது விருப்பமின்றி இருந்தால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தால் நடவடிக்கையெடுக்க முடியும்.

இறைமையுள்ள நாடுகளின் தேசிய எல்லைகளுக்கப்பால் சர்வதேச குற்றவியல் நீதி மன்றமானது எந்தவொரு சூழ்நிலையிலும் மேலாகச் சென்றுவிட மாட்டாது. செல்ல முடியாது, செல்லக் கூடாது. அத்துடன், இறைமையுள்ள நாடொன்றின் சட்டமுறையின் வழமையான செயற்பாட்டை பாதிக்கும் விதத்தில் செயற்பட முடியாது.

அரசாங்கத்தைச் சாராத தரப்பினரால் மேற்கொள்ளப்படும் சர்வதேச பயங்கரவாத நடவடிக்கைகளை கையாளுவதற்கு நீதிமன்றத்திற்கு முடியாத தன்மை காணப்படுகிறது. அதனால் அந்த விடயம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினால் கைவிடப்பட்ட விடயங்களில் ஒன்றாகும். மற்றொரு கைவிடப்பட்ட விடயமாக இருப்பது இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக் கட்டத்தின் போது இலங்கை இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட துஷ்பிரயோகங்கள் தொடர்பாக ஆவணப்படுத்தப்பட்ட விடயமாகும். இந்த விடயங்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் சட்டப் பரிமாணத்திற்கு அப்பாற்பட்டவையாக உள்ளன.

இனப் படுகொலை, போர்க்குற்றங்கள், மனிதத்துவத்திற்கு எதிரான குற்றம் போன்ற விடயங்களை இந்த நீதிமன்றம் கையாளுகிறது. பயங்கரவாதத்தையும் இதில் இணைத்துக்கொள்ள முயற்சி காணப்பட்டது. ஆனால் இன்றுவரை. அந்த விடயத்தில் வெற்றிபெற்றிருக்கவில்லை.

உலகின் மூலைகளில் குறிப்பிட்ட கொடூரங்கள் நடக்கும்போது அவை குறித்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தலாமென சகலரும் நினைப்பதாகத் தோன்றுகிறது. நாங்கள் நீதிமன்றம் தொடர்பாக அதிகரித்துவரும் அங்கீகாரத்தையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைந்துள்ளோம். மறுபுறத்தில் ரோம் சாசனத்தில் விசேடப்படுத்தப்பட்ட சட்ட விதிகளுக்கு அமைவாகவே நாங்கள் செயற்பட வேண்டியுள்ளது. ஆதலால் இலங்கை, இஸ்ரேல், அமெரிக்கா போன்ற சாசனத்தில் கைச்சாத்திடாத நாடுகள் தொடர்பாக நீதிமன்றத்தால் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது என்று அவர் கூறியுள்ளார். (ஏ-8)




## ஆவரங்காலில் விப...

யின் தந்தையே உயிரிழந்தவராவார்.

மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற சி.ஜெனார்த்தனன் (வயது 24) என்பவர் படுகாயமடைந்தார். புத்தூரில் ஆலயமொன்றில் நடைபெற்ற இசை நிகழ்வு ஒன்றை பார்வையிடச் சென்ற போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

எனினும் நேற்று அதிகாலை தோட்டத்திற்கு நீர்ப்பாய்ச்ச சென்ற ஒருவரே சடலத்தையும் மோட்டார் சைக்கிளையும் கண்டு உயிரிழந்தவரின் வீட்டிற்கு தகவலை கூறியுள்ளார்.

சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் மோட்டார் சைக்கிள் ஓட்டிச் சென்ற நபரை கைது செய்து தீவிர விசாரணை செய்து வருகின்றனர். (எ-70)

## இந்தியா-அமெரிக்கா...

எதிரான போர்க்குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றது. இந்த சர்வதேச சூழ்ச்சிகள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் கரிசனை கொள்ளத் தேவையில்லை. ஆனால் துரோகிகளை இனங்கண்டு அவர்களுடனான நட்புறவுகளை இரத்துச் செய்ய வேண்டும்.

அரசாங்கம் போர்க்குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக மிகவும் வெளிப்படையாக செயற்பட்டுவருகின்றது. ஆனால் அதனை ஏற்றுக்கொள்ளாது விசாரணை செய்யுமாறு கூறுவது குற்றத்தை ஒப்புவிக்க எடுக்கும் முயற்சியாகவே அமைகின்றது. இந்தியா, இலங்கையின் அயல் நாடு மட்டுமல்ல; நீண்டநாள் நண்பனும் கூடவாகும்.

இத்தகைதொரு நிலையில் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைக்காமை ஏற்றுக் கொள்ளக் கூடிய தொன்றல்ல. அமெரிக்காவைப் பொறுத்தவரை மனித உரிமைகளை மிகவும் வெளிப்படையாகவே மீறும் நாடாகும். எனவே அமெரிக்கா கூறுவதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் குற்றச்சாட்டை முன்வைக்க அமெரிக்காவுக்கு தகுதியும் கிடையாது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர மேலும் தெரிவித்துள்ளார். (ஏ)

## வவு.சிறைக்கைதி...

வீ.ஆர்.டி.சில்வா மற்றும் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் அடிகளார் ஆகியோர் உண்ணா விரதத்தில் ஈடுபட்ட கைதிகளை நேற்று திங்கட்கிழமை நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இதன்போது நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளுடன் வவுனியா சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல்கைதிகள் பிரச்சினை தொடர்பில் பேச்சு நடத்தி விரைவில் தீர்வு பெற்றுத் தருவதாக மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் வழங்கிய உறுதிமொழியை அடுத்து உண்ணாவிரதம் முடிபுக்கு வந்தது.

இதேவேளை, வவுனியா வைத்தியசாலையிலுள்ள அரசியல் கைதியையும் ஆயர் இராயப்பு ஜோசப் அடிகளார் பார்வையிட்டார்.

(முன் வந்த செய்தி உள்ளே)

(எ-8)

## மக்களின் உரிமைகளை...

அதில் அவர் மேலும் கூறியதாவது,

இந்தப் பிரதேசம் நீங்கள் மட்டும் வாழ்ந்த பிரதேசம் என்பதை நான் ஒருநாளும் மறக்க மாட்டேன்.

30 வருடகால இருண்ட யுகம் இனிமேல் இல்லை. நீங்கள் பட்ட கஷ்டம், நஷ்டம் போதும் போதும்.

இனிமேல்பயம், சந்தேகம் கொள்ள வேண்டாம். புதிய வாழ்க்கை, புதிய வசதி இப்போது ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

கடந்த நாடாளுமன்ற தேர்தலின் போதும், ஜனாதிபதித் தேர்தலின்போதும் இந்தப் பகுதி மக்கள் என்னோடு இருந்தவர்கள். அதை நாம் ஒரு போதும் மறக்க மாட்டேன்.

இந்த நாட்டில் ஜனநாயகம் பாதுகாப்பாக உள்ளது. அது இன்றும் என்றும் பாதுகாப்பாகவே இருக்க வேண்டும். என்றும் இருக்கும்.

உங்கள் உரிமை உங்களிடமேயே இருக்க வேண்டும். அதை யாரும் பறிக்க முடியாது.

உங்கள் பகுதி முன்னேற வேண்டும், உங்கள் மாகாணம் முன்னேற வேண்டும். இலங்கையிலும் சரி, யாழ்.மாவட்டத்திலும் சரி எந்தப் பிரதேசமும் பின்தங்கிய பிரதேசமாக இருக்க முடியாது. அதுதான் எங்களுக்கும் வேண்டும். உங்களுக்கும் வேண்டும்.

அன்பர்களே! வடபகுதி அபிவிருத்தி பெரியளவில் மிக வேகமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எல்லா வசதிகளும் நாம் வழங்குகின்றோம். இன்னும் இன்னும் வழங்குவோம். 30 வருடகால இருண்ட யுகம் முடிந்து இரண்டு வருடத்தில் பல வசதிகளை வழங்கியுள்ளோம்.

சிலர் உங்களை தவறான பாதையில் கொண்டு செல்லப் பார்க்கின்றனர். அவர்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் கோடிக்கணக்கான பணத்தை பெறுகின்றார்கள்.

அன்பர்களே! பொய்ப்பிரசாரம் செய்பவர்களை நம்பவேண்டாம் அவர்கள் எங்களுக்கு வேண்டாம். பயங்கரவாதம் வேண்டாம். எங்களைப்பற்றி யோசிக்க வேண்டும். எதிர்கால சந்ததியினர் பற்றி யோசிக்க வேண்டும் என்றார். (எ-6,8)

## தேர்தல்...

மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தேர்தல்கள் தொடர்பிலான பிரசார நடவடிக்கைகள்யாவும் 20 ஆம் திகதி புதன் கிழமை நள்ளிரவுடன் நிறைவு பெறும்.

அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பிலான செய்திகள், நிகழ்ச்சிகள் மற்றும் விளம்பரங்களை 21, 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் பிரசுரிப்பதற்கோ ஒலி, ஒளி பரப்புவதற்கோ கூடாது.

எனினும் 20 ஆம் திகதி நடைபெறுகின்ற தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் தொடர்பிலான செய்திகளை மறுநாள் ஒலி, ஒளிபரப்புதல் மற்றும் பிரசுரித்தல் எவ்விதமான பிரச்சினையுமில்லை என்றுள்ளது. (ஏ)

## நாட்டில்...

உலகக் குழுக்களிடம் இருப்பதாகவும் சட்டம், ஒழுங்குகளை நிலைநாட்டுவதற்கு இந்த ஆயுதங்கள் தடையாக இருப்பதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ஏ)

**பொருளியற் கல்லூரி**

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**மாபெரும் கருத்தரங்கு**

**< தமிழ் >**

(புதிய, பழைய பாடத்திட்டம்)

ந.சத்தியவேந்தன் (B.A.HONS.M.Phil, Jaffna)

பழைய பாடத்திட்டம் 22/07/2011 பகுதி-I காலை 9-1 மணிவரை
புதிய பாடத்திட்டம் 26/07/2011 பகுதி-I காலை 9-1 மணிவரை
பழைய, புதிய பாடத்திட்டம் 27/,28 திகதி பகுதி-II காலை 9-1 மணி

- 10 மாதிரி வினாக்களுடன், கையேடுகளும் வழங்கப்படும்.
- வெளி மாணவர்களுக்கும் அனுமதி உண்டு. (கட்டணம் 450/-)

Note:- 22.07.2011க்கு முன் உங்கள் அனுமதியினை பெற்றுக் கொள்ளவும். முன்கூட்டி பதிவு செய்யும் மாணவர்களுக்கு மட்டுமே கையேடுகள் வழங்கப்படும். (சி-3809)

**பதவி வெற்றிடம்**

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

- ஒவ்செற் இயந்திரம் இயக்கும் பயிலுநர்கள் (இரவுக் கடமை)
- பத்திரிகை மடிப்பவர்கள் (இரவுக் கடமை)
- பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (பகல், இரவு கடமை)
- சிற்றூழியர்கள் (பகல், இரவு கடமை)

பொருத்தமானவர்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

குறிப்பு: யாழ்.நகருக்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பொது முகாமையாளர்
வலம்புரி
இல.3, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.




அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.07.2011 இல் அச்சிட்டு வெளி...